1954 – 2016


மாத்தளை

# சைவ மகா சபை

# பக்திப் பெருவிழா - 2

## சிறப்புமலர்

24.07.2016



மாத்தளை சைவ மகா சபையின் வெள்ளி விழாவை முன்னிட்டு 08.09.1979 மா/இந்து தேசிய கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட முத்துவிநாயகர் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை சைவ மகா சபையின் பக்திப் பெருவிழா – 2
சிறப்புற நவோதயத்தின் நல்வாழ்த்துக்கள்

# O/L MATHS
## GR- 10 ,9

மாணவர்களே!

- உங்களுக்கு கணிதத்தில் அடிப்படை அறிவு குறைவா?
- நீங்கள் பாடசாலை பரீட்சையில் சித்திப்புள்ளியை அடையவில்லையா?
- உங்களுக்கு கணிதத்தில் ஒரு சித்தியை பெற முடியாது என்ற நிலை உண்டா?
- நீங்கள் முதல் தடவை கணிதத்தில் சித்தியை தவறவிட்டவரா?

ஏன் கவலை! இதோ!

**திரு. K.P. சத்தியசீலன்** ஆசிரியரின்

ஆரம்ப அடிப்படையிலிருந்து இலகு ரீதியாகக் கற்பிக்கும் விசேட கணித வகுப்புக்களுடன் இணைந்துக்கொள்ளுங்கள்.

முதலில் S சித்தியின் பின் C → B → A சித்தியினை நோக்கிய பயணத்துடன் இணைந்திடுவோம் வாரீர்.

# நவோதயம்
## கல்வி நிலையம்

**மாத்தளையில்**
NO: 172A, KIND STREET,
MATALE.

**கண்டியில்**
NO: 28A, HILL STREET,
KANDY.

**0777 802 402**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

1954 2016

" மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் "

# பக்திப் பெருவிழா - 02

## சிறப்பு மலர்

## *2016*



# மாத்தளை சைவ மகா சபை

24.07.2016 ஞாயிற்றுக்கிழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை சைவ மகா சபை கீதம்

வாழ்கவே வாழ்கவே
சைவ மகா சபை வாழ்கவே...
பணியே செய்யும் எண்ணம்
பரம்பொருள் நிலையே காட்டும்
பாரெல்லாம் பரந்த சேவை
செய்து வரும் சபை வாழ்க..

மகத்தான பணிகள் பல செய்து வரும்
எம் சைவமகா சபை வாழ்கவே
வற்றாத கல்விக்கு உற்ற துணையாக
வளமான பணி செய்து வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே
சைவ மகா சபை வாழ்கவே...

கற்றவர் பல பேருள்ளார்
கவிகளும் புனைய வல்லார்
மற்றவர் வியக்கப் பேசி
மகிழ் தரும் எழுத்தும் செய்லார்
கசட்டற வாழ்ந்து காட்டி
நிற்றலை யன்றோ எங்கள்
சைவ மகா சபை வாழ்க
சைவ மகா சபை வாழ்க

பொய்யகம் நீக்கி வஞ்சப்புலனடக்கி
வையகம் முழுவதும் வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே
சைவ மகா சபை வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே
சைவ மகா சபை வாழ்கவே...



**கலாபூஷணம் மாத்தளை கார்த்திகேசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





" சனாதன தர்மம் என

போற்றும்

இந்து சமயத்தவர்கள்

அனைவருக்கும்

இந்நூலை அன்னை

ஸ்ரீ முத்துமாரியம்பிகை

ஆசியோடு

சமர்ப்பிப்பதில்

அக மகிழ்வடைகின்றோம்.

**மாத்தளை சைவ மகா சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திப் பெருவிழா 2 - 2016

## இரண்டாம் அரங்கின் கௌரவத்திற்குரியவர்



**மாத்தளை**
**பரமகுரு ஸ்வாமிகள்**

ஸ்வாமிகள்
1904 ஆண்டு மாத்தளையில் சமாதியடைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே....


| | பக்கம் |
|---|---|
| • பக்திப் பெருவிழா முகப்பு | 01 |
| • சைவ மகா சபை கீதம் | 02 |
| • சமர்ப்பணம் | 03 |
| • சித்தர் - பரமகுரு ஸ்வாமிகள் | 04 |
| • மலரின் உள்ளே... | 05 |
| • அமரர் கலாநிதி சிவநெறிச் செம்மல் த.மாரிமுத்து செட்டியார் | 06 |
| • ஆசிச்செய்தி சிவஸ்ரீ சு. சிவானந்த குருக்கள் | 07 |
| • ஆசிச்செய்தி - இராமகிருஸ்ண மிஷன் | 08 |
| • அகில இலங்கை இந்து மாமன்ற தலைவரின் வாழ்த்துச் செய்தி | 9 - 10 |
| • வாழ்த்துச் செய்தி - பிரம்மகுமாரர் சிவஞானம் | 11 - 12 |
| • சைவ மகா சபை தலைவரின் வாழ்த்துச் செய்தி | 12 - 13 |
| • சைவ மகா சபை செயலாளரின் வாழ்த்துச் செய்தி | 14 - 16 |
| • சைவ மகா சபை பொருளாளரின் வாழ்த்துச் செய்தி | 17 - 18 |
| • மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான தலைவரின் வாழ்த்துச் செய்தி | 19 |
| • வாழ்த்துச் செய்தி - மா/இந்து தேசிய கல்லூரி ,மாத்தளை | 20 |
| • யோகம் - சுத்தானந்த பாரதியார் | 21 - 22 |
| • நிகழ்வுகளின் புகைப்பட பதிவுகள் | 23 |
| • தைப்பூசத் திருநாள் | 24 28 |
| • நிகழ்வுகளின் புகைப்பட பதிவுகள் | 29 |
| • பணி செய் | 30 |
| • மாத்தளை சைவ மகா சபையின் செயற்பாடுகள் | 31 33 |
| **சைவ மகா சபை கௌரவ அங்கத்தவர்களின் புகைப்படம்** | |
| • பிரபஞ்ச விதி | 34 - 35 |
| • மதமாற்றம் ஏற்றுக்கொள்ளக்கூடியதா? ஓர் ஆய்வு | 36 - 39 |
| • இளைஞர் மத்தியில் இறை வழிபாடு | 40 - 42 |
| • 1957 ம் ஆண்டு மகா சிவராத்திரி விழா அழைப்பிதழின் பிரதி | 43 |
| • மாத்தளையில் குன்றக்குடி அடிகளார் | 44 - 46 |
| • பெருந்தோட்ட ஆலயங்கள் | 47 - 48 |
| • திருவள்ளுவர் குருபூசை நிகழ்வின் பதிவு | 48 |
| • பக்திப் பெருவிழா 1,2, கௌரவத்துக்குரியவர்கள் | 49 |
| • குங்குமம் இட்டுக் கொள்வது எதற்காக? | 50 |
| • இந்து வாழ்வியல் தத்துவங்கள் | 51 - 53 |
| • விளம்பரம் | 54 |
| • இந்துக்களும் ஆலய வழிபாடும் | 55 - 56 |
| • விளம்பரங்கள் | 57 - 60 |
| • பக்திப் பெருவிழா போட்டி முடிவுகள் | 61 - 62 |
| • நன்றி நவிலல் | 63 - 64 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திப் பெருவிழா 2 - 2016

# முதலாம் அரங்கின் கௌரவத்திற்குரியவர்



அமரர்

## கலாநிதி, சிவநெறிச்செம்மல்
## த.மாரிமுத்து செட்டியார் அவர்கள்

இறைவனது திருவடியில் : 2008.05.12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பக்திப் பெருவிழா சிறப்பாக நடைபெற எனது நல்லாசிகள்



மாத்தளையில், சைவமகா சபையினரால் நடாத்த இருக்கும் பக்திப் பெருவிழாவை முன்னிட்டு வெளியிட இருக்கும் சிறப்பு மலருக்கு எனது நல்லாசிகளை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பக்திப் பெருவிழாவின் ஊடாக எமது சமுதாயத்திற்கு நல்ல பல அறிவுபூர்வமான நிகழ்வுகளை அறிந்து தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் இக்கால தலைமுறையினருக்கு ஒரு சந்தர்ப்பமாக அமைவதோடு மட்டுமல்லாமல், தமிழையும், சைவத்தையும் வளர்ப்பதற்கு வழிகோலும் என நம்பிக்கையோடு, இன்று நடைபெறும் "பக்திப் பெருவிழா" மிக விமரிசையாகவும் சிறப்பாகவும் நடைபெற எனது நல்லாசியை வழங்குகிறேன். அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்டுவதாக.

சுபம்..!

**சிவஸ்ரீ சு. சிவானந்த குருக்கள்**
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
மாத்தளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பக்திப் பெருவிழா சிறப்பாக நடைபெற எனது நல்லாசிகள்


**RAMAKRISHNA SARADA MISSION - LANKA BRANCH**
52/1, Vivekananda Road, Colombo-6, Sri Lanka.
Tel: 011 - 2361211 email : ceysara@gmail.com


Date:............ 09/07/21

கௌரவ தலைவர்,
சைவ மகா சபை,
மாத்தளை.

## பிரார்த்தனை

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவதுண்டு, 'இறைவனின் பெருமை அவனுடைய எல்லையற்ற ஆற்றலில் இல்லை. முடிவில்லா மாட்சியிலும் ஆட்சியிலும் இல்லை. தன் சித்தப்படியே செயல்படும் திட்டத்திலும் இல்லை. வேறு எதிலிருக்கிறது தெரியுமா? தாழ்நிலையில் நிற்கும் தன் பக்தனுக்கு அருள் புரிய இறங்கி வருகிறாரே, அந்த அன்பில் இருக்கிறது.'

ஹிந்துக்கள் சிலை வழிபாட்டினர் என்று வேறு சமயத்தினர் குற்றம் சாட்டுகின்றார்கள். அவர்களுக்கு நம் வழிபாட்டுமுறை விளங்குவதில்லை. உருவ வழிபாடு இல்லாமல் மிக ஆழமமான பக்தி நிலையை அடைவது கடினம்.

தென்னிந்தியக் கோயில்களில் இத்தகைய உருவ வழிபாடே ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் உருவாக்கியது. கோவிலிலோ, மசூதியிலோ, தேவாலயத்திலோ ஓயாமல் வேண்டுவது இவ்வுலக பொருட்கள் தான், என்றால் இறையன்பு பெருக்கெடுக்காது. சற்றும் சுயநலம் கருதாது தூய அன்பு நெறியைப் பரப்புவதற்காகவே நம் முன்னோர் கண்டுபிடித்த மார்க்கம் அவதார வழிபாடு. வெறும் தத்துவங்களாக இல்லாமல், நம்மிடமே வாழும் தெய்வங்களாகக் கோவிலில் இறைவன் காட்சி தருவதற்கு முக்கியமான காரணம் ஒன்றுண்டு. சிலை வழிபாட்டின் உயரிய நோக்கமே அதுதான். அதாவது தன்னலமற்ற தூய இறையன்பிலும் இறைத்தொண்டிலும் நாம் வளர வேண்டும் என்பது. அதுதான் நம் சமயவாழ்வின் மிக உயர்ந்த லட்சியம்.

நம் புலன்களுக்கு இந்தப் பிரபஞ்சமே ஒரு கோயிலாகத் தெரிகிறது. இந்த பிரம்மாண்ட கோயிலின் நடுவே கர்ப்பக்கிருஹம் என் ஊனுடல். அங்கே இதயம் எனும் பீடத்தில் இந்த பிரபஞ்சத்திற்கே அதிபதி வாழும் கடவுளாக கொலுவீற்றிருக்கின்றான். அடிமுடி காணமுடியாதவன் இந்த அடியவனின் இதயகுகையில் அடைப்பட்டு இருக்கிறான்.

நாள் முழுவதும் நமக்கு வேலைத் தொல்லை, பொழுது போக்குகளும் ஏராளம். எனவே இறைவன் நமக்குள்ளேயே இருக்கின்றான் என்பதை மறந்துவிடுகிறோம். அந்த ஞாபகத்தை தூண்டுவதற்குத்தான் கோயில் கோபுரங்கள், தெய்வ வழிபாடுகள் பக்தகோடிகளின் பஜனைகள். இவை நான் கொஞ்சம் மறந்திருந்த விடயத்தை நினைவுப்படுத்துகின்றன. கோவிலில் அவன் பிரசன்னத்தை உணர்ந்ததும் என் இதயத்திலேயே அவன் எழுந்தருளி இருப்பதை மீண்டும் உணர்கிறேன், என் பக்தியைப் புதுப்பித்துக்கொள்கிறேன்.

இப்படி, நமது சமயம் போதிக்கும் சாரமான தத்துவங்களை அர்த்தமுணர்ந்து "எழுந்திடு! விழித்திடு! குறிக்கோளை அடையும் வரை நில்லாமல் உழைத்திடு! என்ற சுவாமி விவேகானந்தரின் வழிகாட்டுதலைப் பின்பற்றி தனித்தன்மையுடன் முயல்வோமாக. மேன்மைமிகு இச் சைவமகா சபையின் கல்வி மற்றும் ஆன்மீகப்பணி மேன்மேலும் சிறக்கவேண்டும் என்ற பிரார்த்தனையை பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் என்ற தெய்வ திருமூவரின் பாதகமலங்களில் சமர்ப்பித்து அமைகின்றேன்.

மிக்க நன்றி

இப்படிக்கு
அன்னையின் பணியில்

ப்ரவ்ராஜிகா ஆத்மதேவப்ராணா
செயலாளர்
இராமகிருஷ்ண சாரதா மிஷன்
இலங்கைக்கிளை.

RAMAKRISHNA SARADA MISSION
(LANKA BRANCH)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)


நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர்
**Chairman of the Board of Trustees**
வி. கயிலாசபிள்ளை
*V.Kailasapillai*
*Phone:2575566 (Res)*
*Fax : 2575472*
*hariomak@gmail.com*

தலைவர்
**President:**
கந்தையா நீலகண்டன்
*Kandiah Neelakandan*
*Phone: 2580807 (Res)*
*2371100 (Off) - Fax : 2371111*
*neela@mnlaw.lk*

பொதுச் செயலாளர்
**Hony. General Secretary:**
சிங்காரம்பிள்ளை தில்லைநடராஜா
*Singarampillai Thillanadarajah*
*Phone: 2363021 (Res)*
*Mobile: 071-8676498*
*uduvai@gmail.com*

பொருளாளர்
**Hony. Treasurer:**
வே. கந்தசாமி
*V. Kandasamy*
*Phone: 2586620 (Res)*
*Mobile: 071-5349150*
*vkandasami@gmail.com*


## வாழ்த்துச் செய்தி



**கந்தையா நீலகண்டன்**
*தலைவர்*
*அகில இலங்கை இந்து மாமன்றம்*

இயற்கை எழில் கொஞ்சும் குறிஞ்சி நிலப்பரப்பில் அமைந்துள்ள மாத்தளை நகரில் இயங்கிவரும் சைவ மகாசபையினரால் நடாத்தப்படும் "பக்திப் பெருவிழா - 02" என்னும் ஆன்மீக விழாவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நாவலர் காலத்தில் அந்நியர் ஆட்சியின் போது சைவமும் தமிழும், வீழ்ச்சியடைந்த நிலையில் எவ்வாறு சமய விழாக்கள், ஆன்மீகப் பேச்சுக்கள் என்பன மூலம் சமயத்தைக் காப்பாற்றினார்களோ, அவ்வழியில் எமது சமய அறிஞர்களும், பெரியார்களும் தொடர்ந்து ஆன்மீக விழாக்கள், கருத்தரங்குகள், சிந்தனைக்களங்கள் போன்றவற்றை நடாத்தி எமது இளம் சந்ததியினரை சமயரீதியிலும் ஆன்மீக உணர்விலும் மேம்படச் செய்து வருகின்றனர். அவ்வழியில் இந்து மக்களின் உச்ச நிறுவனமான **"அகில இலங்கை இந்து மாமன்ற"**மும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுமுழுவதுமுள்ள அதன் அங்கத்துவ சங்கங்கள் மூலம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக சிவதொண்டர் அமைப்புக்களையும் அமைத்து நிர்வகித்து வருகின்றோம்.

இவ்வழியில் மாத்தளை சைவ மகாசபையும் தொண்டாற்றிவருவது மிகவும் வரவேற்புக்குரியதாகும். இவ்வாறான விழாக்கள் நடாத்துவதற்கு மேலாக சிவதொண்டர் அணிகளை உருவாக்கி அதன்மூலம் இறைபக்தியையும், ஆன்மீக உணர்வினையும் எம் இளம் சமுதாயத்திற்கு ஏற்படுத்தலாமென்பது எமது நம்பிக்கையாகும். இதற்கான சகல அனுசரணைகளையும் அகில இலங்கை இந்து மாமன்றம் வழங்கத் தயாராகவுள்ளதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாத்தளை சைவ மகா சபையின் **"பக்திப் பெருவிழா- 02"** மிகவும் சிறப்பாக நடைபெறவும், அதன்மூலம் அங்கு வாழ் சமூகத்தினர் குறிப்பாக எமது இளம் தலைமுறையினர் ஆன்மீக ரீதியில் வளர்ச்சி பெற்று ஒழுக்க சீலர்களாக மாற வேண்டுமெனவும் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**

நன்றி

**Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka.**
தொ.பேசி/**Phone : 2434990** **www.hinducongress.lk** தொ.நகல்/**Fax : 2344720**
**hinducongress@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



*" பக்தியின் பலன் ஞானமே "*

**பிரம்மகுமாரர் சிவஞானம்**

*மாத்தளை.*

## " பக்திபெருவிழா " சிறப்புற வாழ்த்துக்கள்

மாத்தளை மாநகரில் **62** ஆண்டுகளாக பல்வேறு நேவைகளை செய்து இயங்கி வரும் மாத்தளை சைவமகா சபையின் இவ்வாண்டு "பக்தி பெருவிழா" சிறப்புற வாழ்த்துகின்றேன்.

துவாபரயுகத்தில் விக்கிரமாதித்த மன்னன் **1500** மில்லியன் ரூபாய்கள் உலக வரலாற்றில் துவாபரயுகத்தில், இந்த பூமியில் முதலாவது கோயில் சிவன் கோயிலைக் கட்டிய காலமே பக்தி ஆரம்பமாகிய காலம். தனி வைரக்கல்லில் சிவலிங்கத்தை செதுக்கி மூலஸ்தானத்தில் வைத்து பக்தி வழிப்பாட்டை பெருமைபடுத்தினான் விக்கிரமாதித்தன். அதன் பின்பே ஏனைய மத வழிபாட்டு தலைவர்கள் உருவாகினர் எனலாம். பக்தி மார்க்கத்தில் முதன்மையானவர்கள் நாரதரும், மீராவும் என ஆதிசனாதன தேவி தேவதா தர்மம் கூறுகின்றது. அவர்களை போல் பக்தி செய்தவர்கள் யாருமிலர். இருந்தாலும் பக்தி மார்க்கத்தில் தங்களை அர்ப்பணித்தவர்கள் ஏராளம் ஏராளம் அந்த வகையில் இன்றைய கலியுகத்தின் இறுதிக் காலத்தில் பக்தி மார்க்கத்தில் விழிப்புணர்வு கொண்டுவர மாத்தளை சைவமகா சபையினர் நடாத்தும் பக்தி பெருவிழாவுக்கு நல்ல வாழ்த்துக்களும் நல்லாசிகளும். துவாபர யுகத்தில் கலப்படமற்று அடுத்த பக்தி படிப்படியாக கலியுகத்தில் கலப்படமாகி விட்டது. "கடவுள் ஏன் கல்லானான் கல்லாய் போன மனிதர்களாலே" என்று விழித்த பாடலை போல், மனிதன் பக்தி மார்க்கத்தை கலப்படமாக்கி விட்டான். ஆகையினால் சைவமகா சபையினரின் "பக்தி பெருவிழா" பக்தியின் பலனை பெற்றுக்கொள்ள வழிசமைக்க வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ தலைவரின் வாழ்த்துச் செய்தி



**குமாரசாமி புண்ணிய மூர்த்தி**
கௌரவ தலைவர்,
மாத்தளை சைவ மகா சபை
அகில இலங்கை சமாதான நீதவான்,
சமாஸ்ரீ தேசகீர்த்தி,
ஓய்வு பெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்.

**"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."**

இச் சபை இந்து மக்களின் மிக முக்கிய விரத தினமாகிய மகா சிவராத்திரி தினத்தன்று 1954ம் ஆண்டு மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நாட்களில் எனது வயது 17 ஆகும். மாத்தளைக்குப் புதியவனாக இருந்த என்னை அறிமுகப்படுத்திய பெருமை எனது கல்லூரி நண்பராகிய காலம் சென்ற திரு சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன் அவர்களுக்கே உரித்தாகும்.

எமது இச்சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு இன்று வரை சமூகத்திற்கும், சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் ஆற்றிவரும் சேவைகள் அளப்பரியதாகும். எமது சமூகத்தின் முன்னேற்றத்தை கருத்தாகக் கொண்டு அவர்கள் சமயத்தில் கல்வியில் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என பலவிதமான சேவைகளைச் செய்து வருவது மாத்தளை வாழ் தமிழர்கள் அனைவரும் அறிந்ததே! அச்சேவைகள் பற்றி விபரித்துத் திரும்பத் திரும்பத் சொல்வது பொருத்தமற்றதாகும்.

எமது சபை ஆரம்பிக்கப்பட்டு இன்று 62


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களாகின்றன. இச்சபையே சபைகளுக்கெல்லாம் தாய்ச்சபையாக மாத்தளையில் புகழோடு விளங்குகிறது. இருப்பினும் எமது சபைக்குரிய ஆவணங்களை வைப்பதற்குக் கூட எமக்கென ஒரு இடம் இல்லை என்பது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

எமது மாத்தளையில் பரோபகார சிந்தை படைத்த வள்ளல்கள் வாரி வழங்கும் கொடையாளிகள் இருக்கின்றார்கள். அவர்கள் யாராவது மனமுவந்து அவர்களின் ஞாபகார்த்த-மாகவோ அவர்களில் தாய் தந்தையர்களின் ஞாபகார்த்தமாகவோ ஒரு இடத்தை எடுத்து கட்டிடம் அமைத்து சைவ மகா சபைக்கு அன்பளிப்பு செய்யுமாறு இச்சந்தர்ப்பத்தில் மிகவும் தாழ்மையான வேண்டுகோளை விடுக்கின்றேன்.

24ஜூலை 2016ல் நடைபெறும் பக்திப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறவும், எமது சபை மேலும் சிறப்புறவும் வாழ்த்துகின்றேன்.

எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ முத்துமாரியின் அருள் யாவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ செயலாளரின் வாழ்த்துச் செய்தி



**து.சந்திரசேகரம்பிள்ளை**
கௌரவ செயலாளர் ( 2015 - 2016 )
சைவ மகா சபை - மாத்தளை.

சனாதன தர்மம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் இந்து மதம் பரந்த நோக்குடையது. காலத்தால் தொன்மை வாய்ந்த உன்னத மதமுமாகும். உலகின் பல்வகை சமயப் பண்பாடுகளிலே இந்துப்பண்பாடு தனித்துவமானது. சிறப்புத்தன்மை வாய்ந்தது. அத்தகைய தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளே இந்து மதம் எனும் பெரு விருட்சமாய் இன்று புகழ் பெறக் காரணமாகும். மானுட ஆற்றலைவிட இறைவனின் ஆற்றலே மேலானது என்ற கருத்துக்களையும் வாழ்வியல் தர்மத்தை வாழ்க்கை விதியாக எடுத்துக்காட்டி சமயமும் வாழ்க்கையும் வெவ்வேரானது என பிரித்துக்காட்டாது வாழ்வியலுடன் இணைந்ததே சமயம் என எடுத்துக்காட்டி நிற்கும் மதமே இந்து மதமாகும். மனிதனாக வாழவும், எப்படியும் வாழலாம் என்பதனை விடுத்து இப்படித்தான் வாழவேண்டும் என மானிட வாழ்க்கைக்கு வழிகாட்டி நிற்கும் உயரிய மதமே இந்து மதமாகும். உலகியலையும், ஆன்மீகத்தையும் இணைக்கும் பண்பு கொண்ட மகத்தான இந்து மதம் இன்றைய நவீன விஞ்ஞான யுக காலத்தில் மக்கள் வாழ்க்கையில் எத்தகைய நிலைப்பாட்டில் கடைப்படிக்கப்படுகின்றது அல்லது மத அனுட்டானங்கள், கொள்கைகள் பண்பாட்டுக் கோலங்கள், கலாசார, நாகரிகத் தன்மைகள் எவ்வளவு துாரத்திற்கு வாழ்வியலோடு இணைந்து செல்கின்றன என்ற விடயங்கள் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டிய, சிந்தித்து சீர்படுத்த வேண்டிய கடப்பாட்டுக்குட்பட்ட விடயமாக அமைந்து விட்டன.

மனித வாழ்க்கை பொருளாதார நெருக்கடிகளால் இயந்திரமான நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. நாகரிக மேகங்களும், மேலைத்தேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு கலாசாரப் பின்னணிகளும் மக்கள் வாழ்க்கையில் ஊடுருவி அவர்களின் தனித்துவத்தினை பாதிப்படையச் செய்துள்ளன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன் சுயநலவாதியாக மாறி தனக்கு என்ற ஆசை மேலீட்டினால் தன்னையும் உருமாற்றி தான் பின்பற்றி வந்த மதத்தினது உன்னதமான கொள்கைகளையும், சீலங்களையும் புறந்தள்ளி தன் சுய விருப்பில் வாழத்தலைப்பட்ட இக்கால வேளையில் மனித நேயமும் மனிதாபிமான செயற்பாடுகளும் மரணித்து அல்லது நலிவுற்று செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. மனிதன் மனிதனாக வாழாது மிருகத்தனத்துடன் செயற்பட தன்னை உட்படுத்திக் கொண்டுள்ளான். இந்நிலையில் இருந்து அவன் மீள வேண்டுமாயின் தான் பின்பற்றிய அல்லது பின்பற்றுகின்ற மதத்தின் கருவூலங்களுக்கு அமைய உறுதியாக அவற்றை பின்பற்றி வாழவேண்டும் அப்பொழுதுதான் அவன் மனிதனாக வாழ்ந்து தனது வாழ்வின் இலட்சியத்தை அடைய முடியும்.

திசைமாறிய அல்லது வழி தவறிய இத்தகைய மானிடர்களை உரிய வழியில் மீளவும் வழிப்படுத்தி அவர்களை செம்மைப்படுத்த வேண்டிய பாரிய பணி காலத்தின் கட்டாயமாக இன்றைய நிலையில் முதன்மைப்படுகின்றது. மதங்களை நிர்வகிப்போரும் மதங்களின் வளர்ச்சிக்காக காலத்தின் தேவையுணர்ந்து பணியாற்றிவரும் மத ஸ்தாபனங்களும், சபையினரும், மத வழிகளில் மக்களை வாழ வழிகாட்ட வேண்டிய முக்கிய சமய, சமூகப்பணியை ஆற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது.

அந்த வகையில் மாத்தளை எனும் புண்ணிய பூமியை மையங்கொண்டு இயங்கி வரும் மாத்தளை சைவ மகா சபை இன்று பக்திப் பெரு விழாவினை இறை அருளுடன் கொண்டாடுகின்றது என்றால் அதற்கு யதார்த்தமான பல காரணங்கள் உண்டு. இன்றைய நிலையில் இந்துக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி இந்து ஒருவன் இந்துவாக வாழ்ந்து மகத்தான தனது மதத்தின் கொள்கைகளை உறுதியுடன் பின்பற்றி உயர்வு காண வேண்டும் என்ற பெரு வேட்கையுமாகும்.

"அன்பே சிவம்" என்ற சைவத்தின் உயிர் நாதத்தினை மக்கள் மத்தியில் அன்பு ஜீவகாருன்யம், மனிதநேயம், மனிதாபிமானம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம பண்புகளுடன் இணைத்து இந்துக்களை ஓரணியில் திரட்டி இந்து தர்மத்தினை மேலும் வலுப்படுத்திடவும், மன உறுதியற்ற நிலையில் மத மாற்றங்களுக்குள்ளாகி வருவோரை மீண்டும் சிந்தித்து தம் நிலை உணர்ந்தும் தாம் பின்பற்றிச் சென்ற அல்லது தம்முன்னோர் பின்பற்றி உய்த உன்னத மதத்தின் தாற்பரியங்களை உணர்ந்து மீளவும் மனம் மாறி இணைவு கொள்ள வழிகாட்டிடவும் இப்பக்திப் பெரு விழா உதயம் கண்டுள்ளது.

மறந்தும், மறைந்தும் வரும் எம் கிராமியக் கலைகள் மீண்டும் புத்துயிர் பெற்று இளம் சந்ததியினருக்கு பயன் கொள்ளச் செய்யவும் எம் மதக் கலைப் பொக்கிஷங்களை வெளியுலகத்தோருக்கு வெளிப் - படுத்தவும் பக்திப் பெரு விழா வழி சமைக்கின்றது. எம் மதத்தின் தாற்பரியங்களை நன்கு உணர்ந்து அதன்படி வாழ்ந்து துறவறம் பூண்டு மாத்தளை வாழ் மக்களுக்கு ஆன்மீக போதனைகளை வழங்கிய சித்தர் பரமகுரு சுவாமிகளின் நாமத்தை கொண்டும், மாத்தளையிலேயே வாழ்ந்து தந்தை, மகன் என்று பரம்பரை, பரம்பரையாக நம் சமயத்தவர்களுக்கு பெரும் சேவையாற்றிய பெருந்தகை அமரர் கலாநிதி சிவநெறிச் செம்மல் த.மாரிமுத்து செட்டியாரின் பெயரிலும், இரண்டு அரங்குகளுடாக பக்திப் பெருவிழா - 2 வீறு கொண்டு எழுச்சி காணுகின்றது.

இன்றைய கால கட்டத்தில் சைவ மகா சபையினராகிய நாம் இந்துக்களை ஓரணியில் இணைத்து விழிப்புணர்வடையச் செய்து இந்து தர்மம் காத்து அவர்கள் தம் வாழ்வு சிறக்க வேண்டும் என்ற பெரு நோக்குடன் இப் பக்திப் பெருவிழாவை முன்னெடுத்து செல்கின்றோம் என்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ பொருளாளரின் வாழ்த்துச் செய்தி



**இரா.கிருஷ்ணகுமார்**
கௌரவ பொருளாளர் ( 2015 - 2016 )
சைவ மகா சபை - மாத்தளை.

பண்ணகாமம் எனும் பெயர் கொண்ட மாத்தளை மாநகரிலே ஆழவிருட்சமென பரந்து விரிந்திருக்கும் மாத்தளை சைவ மகா சபையானது 1954ம் வருடத்திலே அன்றைய சைவசித்தாந்திகளால் வளர்த்தொடுக்கப்பட்டு இன்றுவரை எம்மால் அரவணைத்து வளர்த்து செயற்படுத்தப்படும் மாபெரும் சபையாக திகழ்கின்றது.

சமய, கல்வி, கலை, இலக்கிய பண்பாட்டு நடவடிக்கை-களில் ஈடுபட்டு இவற்றை வளர்த்தெடுப்பதிலும் அத்தோடு எம்மக்களுக்கு ஏற்படும் இயற்கை அனர்த்தங்களின் போது அவர்களின் துயர்துடைப்பதில் எமது கரங்கள் முன்னிணைந்து செயற்பட்டு வருகின்றன. மேலும் தனிநபர்களின் கஷ்ட நஷ்டங்களிலும் கலந்து அவர்களது தேவைகளை கேட்டு, எமது சபை முடியுமான உதவிகளையும் செய்து வருகின்றது என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

எமது சபையானது சமூகத்தின் மூத்த அறிஞர்களையும், கல்வியாளர்களையும், எழுத்தாளர்களையும், வர்த்தகர்களையும் அரச தனியார் உத்தியோகஸ்தர்களையும் அங்கத்தவர்களாக கொண்ட நிர்வாக சீரமைப்புடன் செயற்படும் கட்டுக்கோப்பான ஆளுமை கொண்ட ஒழுக்கம் மிக்க அமைப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 வருட வைரவிழாவை பூர்த்தி செய்துள்ள இச்சபையானது இன்று வரை வாடகை முகவரியிலேயே இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது.

60 வருடங்களுக்கு மேலாக சமூகத்திற்காக பல இலட்சங்களை செலவு செய்து தன்னலமற்று தொண்டாற்றிய எமக்கு இன்று வரை நிரந்தர இடத்தையோ, கட்டிடத்தையோ போல பெற முடியாமல் போனது எமது செயற்பாடுகளுக்கு மிகப்பெரிய பின்னடைவாகும்.

ஆகவே எமது எதிர்கால திட்டங்களில் மிக முக்கியமானது இச்சபைக்கு நிரந்தர இடத்தை பெறுவதாகும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகட்கு"

சைவப் பெருமக்கள் எமது இந்த ஆதங்கத்தை பூர்த்தி செய்வதில் துணை நிற்க வேண்டுகின்ற அதேவேளை, பக்திப் பெருவிழா நிகழ்வு சிறப்புற எனது வாழ்த்துக்களை வழங்குவதில் மனமகிழ்வடைகின்றேன்.

நன்றி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



**தி.விக்னேஸ்வரன் செட்டியார்**
தலைவர்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
மாத்தளை.

மலையக வாயிலாக கொண்டிருக்கும் மாத்தளை மாநகரில் சைவத்தையும், தமிழையும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் மாத்தளை சைவமகா சபையினரது "பக்திப் பெருவிழா" விலே வெளியிட இருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது சமுதாயத்திற்கென பன்னெடுங்காலமாக சேவையாற்றி வரும் சைவ மகா சபையினர் மாணவ சமுதாயத்திற்கு மேம்படுத்துவதற்கான வழிபாடுகளை மேற்கொள்ளவும், தமிழ் கலை, கலாசார விழுமியங்களை பாதுகாப்பதற்கான பக்திப் பூர்வமான அரங்குகள் நடாத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் இப்படிப்பட்ட பக்திப் பெருவிழாக்கள் வழி சமைக்கும் என நம்புகின்றேன்.

**24.07.2016**ல் நடைபெற இருக்கும் "பக்திப் பெருவிழா" அன்னையின் அருளால் மிக சிறப்பாகவும், விமரிசையாகவும் நடைபெற அம்பிகையை பிரார்த்திப்பதோடு, எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுபம்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

**வாழ்த்தும் இவர்கள் : அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**மா/ இந்து தேசிய கல்லூரி – மாத்தளை**

"ஈழமெங்கும் மாத்தளை சைவ மகா சபையின் சேவை பரவச் செய்ய வேண்டும்" என்பதற்கிணங்க சைவப்பணி ஆற்றி வரும் சைவ மகா சபையினர் தமது 2வது பக்திப் பெருவிழாவை முன்னிட்டு வெளியிடும் சிறப்புமலர் சிறப்பாக அமைய மா/இந்து தேசியக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாக வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

மாத்தளை சைவ மகா சபையினரின் சைவப் பணிக்கு சான்று பகருகின்றது, மா/இந்துக் கல்லூரியின் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம். அதுமட்டுமல்ல இச்சபையானது வருடந்தோறும் மாத்தளை வாழ் தமிழ் மாணவர்களின் தமிழ்க் கல்வியையும், சமயக் கல்வியையும் வளர்ச்சி அடையச் செய்யும் நோக்கில் போட்டி நிகழ்வுகளை நடாத்தி மாணவர்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி வருவது பாராட்டுதற்குரியது. மேலும் எமது ஆலயத்தின் வருடாந்த அபிஷேக பூஜைகளை சபையினர் ஏற்று எமது அனுசரனையுடன் நடத்துவது போற்றற்குரியது.

"சைவம் முதலாம் அளவில்
சமயம் வகுத்து போன
சமரசம் வகுத்த நீ" என தாயுமானவரும்,

" **யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்** " என சிவஞான சித்தியாரும்,
இன்னோர் பலரும் சைவத்தின் தொன்மையையும் பரந்த நோக்கத்தினையும் சமரசப் போக்கினையும் காலத்துக்கு காலம் எடுத்தோதி வந்திருக்கிறார்கள். அந்த வழி வந்த எமது மாத்தளை சைவ மகா சபையினரும் சமுதாயம் தழுவிய சமயம், சமயம் தழுவிய சமுதாயம் என்ற கொள்கையின் படி சமயம் அழிந்தால் மொழி அழிந்துவிடும், மொழி அழிந்தால் இனம் அழிந்துவிடும், என்பதற்கு வரலாற்று நிகழ்வுகள் சான்று பகருகின்றன. எனவே அந்த வகையில் இவற்றினை கருத்தினில் கொண்டே சைவ மகா சபையினர் முதிர்ந்த வயதிலும் சபையின் செயல்களை முதிரவிடாது பணியை தொடர்ந்து செய்கின்றனர்.

எனவே இந்துக் கல்லூரியின் சார்பாக அவர்களின் வருட பணியையும், சேவைகளையும் மேலும் தொடர எமது வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகட்டும்.

நன்றி..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவ மகா சபையின் அழைப்பின் பேரில் 1961.11.25ம் திகதியன்று மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் 'கவியோகி சுத்தானந்த பாரதியார்' ஆற்றிய உரையின் பகுதி...**

## யோகம்.

யோகம் என்றால் என்ன? யோகம் என்றால் இணைப்பு அல்லது சேர்தல் என்று பொருள். அதாவது ஜீவான்மாவும், பரமான்மாவும் இணைய முற்படும் சாதனமே யோகம் என்பதாகும். இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்காகும்.

| | | |
|---|---|---|
| **சரியை** | - | இறைவனைச் சேர - சார நினைப்பது |
| **கிரியை** | - | இறைவனைச் சேர செயல்படுவது. |
| **யோகம்** | - | இறைவனாகிய பரமான்மாவோடு ஜீவான்மா இணைவதற்குச் செய்யும் புனஸ்காரம், பிரார்த்தனை, தியானம், இத்யாதிகள். |
| **ஞானம்** | - | இறைவனும் ஜீவனும் இணைந்த விட்ட தன்மை. ஞானம் என்பது பரந்த அறிவு. ஜீவ அறிவு பரமாத்மா என்கிற பேரறிவுச் சுடருடன் ஜோதியுள் ஜோதியாகச் கலப்பது. |

### பொதுவாக சிறப்பாகப் பேசப்படும் யோகங்கள் நான்கு

*01.* தன்னலத்தைவிட அதிகமாகப் பிறர் நலத்தைக் கருதி பணியாற்றுவது கர்ம யோகம்.

*02.* மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும். இந்திரியங்கள் வாயிலாகவும், மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற அந்த கரணங்களாலும் கீழான விஷயங்களில் கவர்ந்து இழுக்கப்படாமல் நற்காரியங்களில் ஈடுபடுவது. அவைகளை எண்ணுவதும் இராஜ யோகம்.

*03.* ஆண்டவனிடத்தில் மட்டுமன்றி ஆருயிர்களிடத்திலும் அன்ப கொள்ளுதல் பக்தி யோகம்.

*04.* ஒன்றே பரம் என்று உணர்ந்தே, உணர்ந்தாங்கு நின்றே அறவழியில் நிற்பது ஞான யோகம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்த "யோகம்" என்ற சிந்தனைச் சிதறல்களை யாருக்காகச் சொல்லப்படுகின்றன தெரியுமா? உலகத்தில் உள்ள போக மக்களுக்காக அல்ல, யோக மக்களுக்கே. ஆகவே நீங்கள் உங்களை "யான்" "எனது" என்று கூறும் தன்மை நிலையை இறைவனை நோக்கி "நீ" "உனது" என்று அவனை முன்னிலை ஆக்கிப் பற்றிக் கொண்டால் அதுவே யோகம். அப்படி தன்னை இறைவனுக்குக் கொடுத்து விட்டு தன் தெய்வ பக்தி சிந்தனையால் இறைவனுடைய பொருளாக ஒருவன் தன்னை மாற்றிக் கொள்வது தான் சிறந்த புத்திசாலித் தனமாகும்.

கவியோகி
சுத்தானந்த பாரதியார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்திப் பெருவிழா – 1, நிகழ்விற்காய் 2012 இல் இந்தியாவில் இருந்து வருகைத் தந்த சிறப்பு சொற்பொழிவாளர் திருமதி.சுமதிஸ்ரீ அவர்கள் சகிதம், அதிதிகள் மற்றும் சபையின் கௌரவ அங்கத்தவர்கள்.



திருமணத்தை பதிவு செய்திராத 25 தம்பதியருக்கு இலவசமாக பதிவு திருமணத்தை சைவ மகா சபையினர் 2004 இல் மேற்கொண்ட நிகழ்வு




மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திற்கு தண்ணீர் தொட்டியை சபையினர் அன்பளிப்பு செய்த காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பூசத் திருநாள்

தமிழர்தம் பண்பாட்டோடும், சமய சமூக விழுமியங்களோடும் தை மாதத்தின் மகத்துவம் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. "தை பிறந்தால் வழிபிறக்கும்", "தைப்பூசத் திருநாளிலே மாமன் பெண்பார்க்க வருவானடி" என்பது போன்ற இந்து மக்களின் நம்பிக்கை புதைந்த முது மொழிகள் எல்லாம் தம் வாழ்க்கையோடு தை மாதம் எந்தளவிற்கு பிணைப்புற்றுக் காணப்படுகின்றன. உழவுத் தொழிலையே தமது உயிராதாரமாகக் கொண்டிருந்த நம் முன்னோர்கள் அத்தொழிலுக்கு ஆதார சக்திகளாக விளங்கிய ஆதவனுக்கும், ஆநிரைக்கும் நன்றியை அகநெகிழ்வுடன் தம் அறுவடைகளோடு அர்ப்பணிக்கும் அற்புதமான பண்பினை அடையாளங்காட்டும் திருநாள் பொங்கல் பண்டிகை. உழவுக்கும், தொழிலுக்கும் மகத்துவமளித்து உண்டி கொடுத்தோரை உயிர் கொடுத்தோராய்ப் போற்றும் தமிழ் குடிமக்களின் பண்பாட்டின் சிகரமாக மிளிர்வது உழவர்த் திருநாளாம் தைத்திருநாளே பொங்கல் பண்டிகை. தமிழ் வருடத்தின் முதல் மாதமாகக் கணிக்கப்படும். தைமாதத்தின் முதலாம் நாளிலேயே பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தமிழரின் வருடப்பிறப்பும் அன்றைய நாளிலேயே அமைவதும் ஒரு சிறப்பு. இவ்வாறாக வரவேண்டும் என பாரிய எதிர்பார்ப்புகளோடும் ஆவலோடும் தமிழர் காத்திருக்கும் தனித்துவம் பெற்றது தைமாதமே.

இத் தை மாதத்தின் சிறப்பை மேலும் வலுவூட்டி நிற்பது தைப்பூசத் திருவிழா நாளாகும். நட்சத்திரங்களுக்குள் எட்டாவது இடத்தில் உள்ளதாகக் கொள்ளப்படுவது பூச நட்சத்திரம். பூசம் உச்சத்திற் கூடும் சுப காலத்தைக் கொண்டதாக தை மாதத்தில் வரும் முழுமதி நன்னாளே தைப்பூசத் திருநாளாகும். தையும் பூசமும் கூடிய இந்நாள் பல்வேறு காரணங்களினால் சைவ சமயத்தவர்களால் புண்ணியம் நிறைந்த நாளாகக் கருதப்படுகிறது. அண்டசராசரமுமே தோன்றிய அற்புதமான நாள் இந்த தைப்பூசத் திருநாள் என்பதும் இந்துக்களின் நம்பிக்கை. தில்லை சிதம்பரத்திலே திருநடனம் புரிகின்ற நடராஜப் பெருமான் உமையம்மையாரோடு ஆனந்தத் திருநடனம் புரிந்து தேவாதி தேவருக்கும், முனிவர்க்கும், அடியார்க்கும் அற்புதக் காட்சி தந்த புனிதமான நாளாக இந்நாள் சைவர்களால் போற்றப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பர நாதனுக்காய்த் திருத்தொண்டு புரிந்து இரணியவர்மன் இறைவனின் தரிசனம் பெற்றதும் இந்த நாளிலேயே எனக் கொள்ளப்படுகிறது. இக்காரணங்களை மையமாகக் கொண்டு சிவாலயங்களில் தைப்பூசத் தினத்தன்று விசேட அபிஷேக பூஜை ஆராதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தைப்பூச விழாவிற்குப் புகழ் பெற்ற தலமாக விளங்குவது தஞ்சை திருவிடைமருதூர் ஆலயமாகும். முறையாக விரதம் அனுட்டித்து அங்குள்ள சித்த தீர்த்தத்தில் திருமுழுக்காடி வில்வமரத்தை வலம் வந்து இறை திரிசனம் செய்வோர் தாம் செய்த பாவங்கள் எல்லாம் ஒழியப்பெற்று புண்ணியம் பெறுவார்கள் என்பர். இந்நாளில் திருநெல்வேலி தாமிரபரணியில் தீர்த்தமாடுவதும் திருப்புடை மருதூரில் சிவ தரிசனம் பெறுவதும் பாக்கியம் சேர்க்கும் என்று கருதப்படுகிறது. எல்லா சிவாலயங்களிலுமே தைப்பூச விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பூசம் குருபகவானுக்கு உரிய சிறப்பு நட்சத்திரமாகக் கொள்ளப்படுகின்றது. இந்நாளில் குருபகவானை வழிபடுவதன் மூலமாக மேலான ஞானத்தோடு நற்பேறுகளையும் பெற்றுக்கொள்ளும் அரும் புண்ணியம் கிட்டும். இச்சிறப்புக் கருதி இந்நாளில் வித்தியாரம்பம் செய்யப்படும் வழக்கமும் இந்துக்களிடம் காணப்படுகிறது.

தைப்பூச விரத அனுட்டானத்தில் பல்வேறு விதி முறைகள் பின்பற்றப்படுகின்றன. முக்கியமாக அன்று அதிகாலை நித்திரைவிட்டெழுந்து குளிர்ந்த நீரிலே நீராட வேண்டும். போசனம் தவிர்த்து மூன்று வேளையும் பாலும் பழமும் மட்டும் உட்கொண்டு மாலையில் ஆலய தரிசனம் மேற்கொண்டு சிவபூசை வழிபாடுகளில் ஈடுபட்டு விரதத்ததை நிறைவு செய்து கொள்ளலாம். பக்திப் பரவசத்தோடு சிவ சின்னங்களைத் தரித்துக் கொண்டு தேவாரத் திருவாசகப் பாராயணங்களுடன் பூசை வழிபாடுகளில் ஈடுபடுவது விரதத்தை புனிதமாக்கி புண்ணியம் சேர்க்கும்.

தமிழ்க் கடவுள் முருகப் பெருமானுக்கும் தைப்பூசத்திற்கும் மிக நெருக்கமான புராணத் தொடர்புகள் காணப்படுகின்றன. குமரப் பெருமான் பிறந்ததும் இந்த தைப்பூச நாளிலே தான் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுவோரும் இருக்கிறார்கள். எனினும், முருகன் திருவவதாரம் பெற்றது வைகாசி விசாகத்திலேயே என்பது ஐதீகமாகக் கொள்ளப்படுகிறது.

கந்தப் பெருமான் தாரகாசுரனை வதம் செய்து தேவர்களை காத்த நிகழ்வு இடம் பெற்ற நாள் தைப்பூச நாளாகும். தன்னை எவராலும் வெல்லவோ அழிக்கவோ முடியாது என்ற ஆணவத்தினால் தாரகாசுரன் தன்பலத்தின் மீது அதீத நம்பிக்கை கொண்டான். தனது அசுரப் படைகளுடன் கூடி தேவர்களோடு பல்முறை போர் தொடுத்து வெற்றி கொண்டான். தேவர்களுக்குத் தாங்க முடியாத அழிவுகளைச் செய்து துன்புறுத்திக் கொண்டிருந்தான். சூரனின் கொடுமைகளைப் பொறுக்க முடியாத தேவர்கள் கயிலை நாதரை அடைந்து தாரகாசுரனை அழித்துத் தம்மைக் காக்க தமக்கு ஒரு வல்லமை மிக்கத் தலைவனைத் தரவேண்டும் என வேண்டிக் கேட்டனர். சிவன் தனது அகண்ட சக்தியினால் நேரடியாக கந்தக் குமரனைத் தோற்றுவித்து தேவர் படைக்குத் தலைவனாக்கினார். பார்வதி தேவி தனது சக்தியை வடிவாகக் கொண்ட வேலாயுதத்தை கந்தனுக்கு ஆயுதமாக அருளினார். வேலனைக் கண்ட சூரன் தனைமறந்து அவன்பால் பக்தி கொண்டான். ஆயினும் ஆணவத்தினால் பணியத் தயங்கிய சூரன் கந்தசக்தியின் வலிமையினால் வதம் புரியப்பட்டான். மரணத்தருவாயில் தான் குமரன்பால் கொண்ட அளவுகடந்த பக்தியை வெளிக்காட்டி என்றும் முருகனுடன் பிரியாதிருக்கும் வரத்தை பெற்றுக் கொண்டான். இவ்வற்புதம் நிகழ்ந்த நாள் இந்த தைப்பூச நாளே என்பர். முருக பக்தர்கள், சூரன் அழிக்கப்பட்டதை நினைவுகூறும் நாளென தைபூசத்தைக் கொண்டாடுவோரும் உள்ளார்கள்.

இத்தகைய சிறப்புகளால் முருகனின் அடியார்கள் தைப்பூசத் திருநாளை வெகு பக்தி சிரத்தையோடு கூடிய விரத நாளாகப் போற்றிக் கொண்டாடுகிறார்கள். "**பாவத்தைப் பகை பாவியைப் பகையாதே**" என்ற யதார்த்த வாழ்க்கைச் சித்தாந்தத்தின் அடிப்படை, தைப்பூசத் திருவிழாக் கொண்டாட்டத்திற்குள்ளே புதைந்து கிடப்பது இவ்விழாவின் சமூகம் சார்ந்த சமயப் பாங்கினை சிறப்புடன் நோக்கச் செய்கிறது. முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழனியிலே தைப்பூசத் திருவிழா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. புலனடக்கம், புனிதம், விரதம், பக்தி, தானம், கூட்டுப் பிரார்த்தனை, பாசுரப் பாராயணம், அபிஷேகம், ஆராதனை, மொட்டையிடல், வேலேற்றம், காவடி, தீமிதிப்பு, பாற்குடம், தீர்த்தம் என சமய வழிபாட்டு அம்சங்கள் பலவற்றையும் ஒருங்கே கொண்ட ஆன்மீக விழாவாக இவ்விழா கொண்டாடப்படுகிறது.

முருகனுக்கு உரியதாகக் கருதப்படும் தைப்பூச நன்னாளிலே உழவர்ப் பெருமக்கள் தமது விளைநிலம் சென்று கிழக்கு நோக்கி ஆதவனை வணங்கி தேங்காய் உடைத்து ஆண்கள் அறுவடையைத் தொடங்குவார்கள். முதல் அறுவடைக் கதிர்களைக் கொண்டுவந்து குடும்பத் தலைவன் இல்லத்தரசியிடம் கையளிக்க, அவள் அவற்றைப் பெற்று சுவாமியறையில் வைத்துப் பூசிப்பாள். பூசைகள் நிறைவுற்றதும் புது நெல்மணிகளில் சிறிதளவை எடுத்து உமிநீக்கிப் பெற்ற அரிசியுடன் பசும் பாலும், வாழைப்பழமும் இட்டுப் பிசைந்து கணவனுக்கு அளித்து குடும்பத்துடன் பகிர்ந்து உண்பார்கள். ஆலயத்திற்குச் சென்று பாற்குடம், காவடி எடுத்து இறைவழிபாடு செய்வார்கள். புது நெல்லரிசி பொங்கி பகலுணவுடன் நோன்பு துறப்பார்கள். இலங்கையில் பெரும்பாலும் யாழ்பாணத்திலும் தைப்பூசம் இவ்வாறு கொண்டாடப்படுவது அவதானிக்கப்படுகிறது. புதுமணப் பெண்பார்த்தல், திருமணப் பேச்சுக்கள் ஆரம்பித்தல் போன்ற சுபநிகழ்வுகளும் இந்நாளில் மேற்கொள்ளப்படுவதுண்டு. இவ்வகையில் தைப்பூசம் சமூகப் பண்புகளைக் கொண்டு முக்கியத்துவம் பெற்று விளங்குவதும் சிறப்பம்சமாகும்.

உலகத்தில் எங்கெங்கெல்லாம் இந்து தமிழ் மக்கள் விரவி வாழ்கின்றார்களோ அங்கங்கெல்லாம் தைத்திருநாள் சமயம் சார்ந்த சமூக விழாவாகக் கொண்டாடப்படுவதைப் போலவே, அம்மக்களால் சமூகம் சார்ந்த சமயப் பெருவிழாவாக தைபூசத் திருநாளும் கொண்டாடப்படுகிறது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மட்டுமல்லாது மிகச் சிறுபான்மையாக வாழுகின்ற சிங்கப்பூர், மொரீசியஸ், மலேசியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிலுங் கூட தைப்பூசம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. உதாரணமாக, இவ்விழா மொரீசியஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாட்டிலே "தைபூசக் காவடித்திருவிழா" என்ற பெயரோடு தேசிய விழாவாகக் கொண்டாடப்படுவது விசேட அம்சமாகும். பூசத்திற்கு முன் நாற்பத்தெட்டு நாட்கள் ஆகம விதிமுறைகள் சற்றும் வழுவாது கடுமையான விரதம் மேற்கொள்ளப்படுகிறது. அக்காலத்தில் மிக்க ஆசாரங்களோடு புனிதப் பணியாக தைப்பூசக் காவடித் திருவிழாவிற்குத் தேவையான காவடிகள் உருவாக்கப்படுகின்றன. தைப்பூசத் தினத்தன்று முருகன் நாமத்தில் பல்வேறு வகைகளிலான வித விதமான காவடிகள் பக்தர்களால் சுமக்கப்பட்டு வீதிகள் தோறும் பக்திப்பரவச ஆட்டங்களோடு கொண்டு செல்லப்பட்டு முருகன் ஆலயத்தில் ஆயிரக்கணக்கிலான காவடிகள் உருவாக்கப்படுகின்றன.

முருகப் பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்டு தீர்த்தமாடி விரதம் நிறைவு செய்யப்படுகிறது. அங்கே அன்றைய நாள் பொது விடுமுறை தினமாக விதிக்கப்பட்டுள்ளது. மலேசியாவிலும் இத்தைப்பூசக் காவடித் திருவிழா பக்தி சிரத்தையுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த தைப்பூசக் காவடி விழாவின் தோற்றம், காரணம், பாரம்பரியம், வகைகள், முறைகள் போன்றவற்றில் பல்வேறு முருக வழிபாட்டுடன் பிணைந்த நம்பிக்கைகளும் ஐதீகங்களும் விரிவுபடுகின்றன.

ஆகவே, இந்து தமிழ் மக்களின் சமூக ஆன்மீக வாழ்க்கையிலே தைப்பூசத் திருவிழா தனித்துவமான ஓரிடத்தைப் பெற்று அவர்களின் புதுமைமிகு வாழ்க்கைக்கு புத்தூக்கம் அளிக்கும் முறைகளோடு சிறப்புறக் கொண்டாடி இறையருள் பெறுவோமாக.

ஆக்கம் :
**சோ.செல்வகுமார்**
முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்
மாத்தளை .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாத்தளை சைவ மகா சபையால் மாத்தளை இந்து கல்லூரியில் அமைக்கப்பட்ட ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேக நிகழ்வின் போது.




மாத்தளை சைவ மகா சபையின் பொன்விழாவின் வரவேற்பு பந்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிசெய்

எவரையும் நிந்திக்காதே, தூற்றாதே, உனக்குதான் எல்லாந் தெரியும். பிறர் மடையர் என்று எண்ணாதே. அவரவரளவில் அவர்க்கு அறிவு உள்ளது. உன்னிடம் ஏதேனும் நல்லது இருப்பினும் அதைப் பொதுவாக, அமைதியாக செருக்கின்றி, சூரியன் ஒளி தருவது போல, ஆறு தண்ணீர் தருவது போல உலகத்திற்கு தா. இயல்பாகச் செய். நீயும் வாழு. பிறரையும் வாழ விடு. எவன் எல்லாந் தெரிந்ததாகப் பிதற்றுகிறானோ அவன் ஒன்றுமறியான். எவன் அமைதியாக ஆணவச் சலசலப்பின்றி இருக்கிறானோ அவனே நிறைகுடம். பிறரைத் தூற்றாமல், தானெனும் செருக்கில்லாமல், தான் சொல்ல வேண்டியதை உள்ளம் உணர்ந்து சொல்ல வேண்டும். அதுவே பயனுள்ள சொல். தான் உணர்ந்ததையே சொல்ல வேண்டும். அதுவே பயனுள்ள சொல். ஆயிரம் மேற்கோள்களை சண்டமாருதம் போலக் கொட்டுவோனைவிட தான் படித்து முயன்று கண்ட உண்மையை நடந்து காட்டுவோன் மேலோனாவான்.

அமுதை அள்ளியுண்டால் தான் பசி நீங்கும். அமுதைப் பற்றி அழகாகப் பேசினாலும், எழுதினாலும், பசி நீங்குமா? எவ்வளவு வர்ணித்தாலும் சக்கரை இனிக்குமா? ஒரு துளி ருசித்தால் அத்தனை அத்தனை பேச்சிற்கும், எழுத்துக்கும் மேலே இனிக்கும். அதுபோல உண்மையை அமைதியாக முறையோடு சொன்னால் தான் புரியும்.

இவ்வுலகக் கோயிலில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அருட் பணியுள்ளது. எதுவும் அற்பமல்ல, ஒவ்வொருயிரிலும் ஒரு தனிப்பெருமை உள்ளது.

உன்னுள் ஆழச்சிந்தனை செய், உன்னியல்பைக் கேள்? அது ஒரு பணியை நோக்கும் மனசாட்சியைக் கேள்? சரியென்றால் அப்பணியே இறைவன் உனக்கிட்ட பணியென்றறி. அப்பணியை உனது பேர் புகழுக்காகச் செய்யாதே, உன் மனசாட்சி மகிழும் படி அமைதியாக இறைவனுக்கே வேள்வியாகப் பணி செய். அச்செயலே வழிபாடாகும். இவ்வகையாகவே பணி புரிந்து இறைவனருளை பெறுவோமாக.

ஆக்கம் :

**"கலாபூஷணம்" மாத்தளை கார்த்திகேசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்தளை சைவ மகா சபையின் செயற்பாடுகள்

### கல்வி

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு முன் பயிற்சி அளிக்குமுகமாக முன்னோடிப்-பரீட்சைகள் நடாத்துதல். இப் பரீட்சைகள் 2006ம் ஆண்டு தொடக்கம் நடத்தப்பட்டு வருகின்றது.

முன்னோடிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு செயலமர்வுகள் நடாத்தி மாணவர்களை பரீட்சைக்கு தயார்படுத்துதல். மூன்று நிலையங்களில் சுமார் 350 மாணவர்கள் வரை ஒவ்வொரு வருடமும் பங்குபற்றி வருகின்றனர். இப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும், அம்மாணவர்களை ஊக்குவித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்குமுகமாக பாராட்டு விழாவை நடாத்தி ஊக்குவித்தல்.

க.பொ.த உயர்தரம் கற்கும் மாத்தளை மாவட்ட தமிழ்பாடசாலை மாணவர்களில் தெரிவு செய்யப்படும் 10 மாணவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக புலமைபரிசில் ஒன்று வழங்கப்பட்டு வருகின்றது. இப்புலமைபரிசில் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் எமது புலமைப்பரிசில் பெற்ற மூன்று மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகினர்.

பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், கொப்பிகளும் வருடா வருடம் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பல்கலைக்கழக அனுமதிப்பெற்று செல்லும் மாணவர்களுக்கு அவர்களை ஊக்குவிக்குமுகமாக ஊக்குவிப்பு தொகையொன்று வழங்கப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயம்

விஜயதசமியன்று ஏடு தொடங்கும் பிள்ளைகளுக்கு அரிச்சுவடியும் இனிப்பும் வழங்கப்பட்டு வருகின்றது. இவ் வருடம் முதல் வசதி குறைந்த பிரதேசமொன்றை தெரிவு செய்து, அப்பகுதியில் ஏடு தொடங்கும் வைபவமொன்று நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வருடா வருடம் தை மாதத்தில் தெரிவு செய்யப்பட்ட பின் தங்கிய தோட்டத்தில், அத்தோட்ட மக்களையும், பாடசாலை. கோயில் என்பவற்றையும் இணைந்து பொங்கல் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் போது பாரம்பரிய கலைகளான காவடி, காமன் கூத்து, தாலாட்டு, கோலம் போடுதல், விவாதம் என்பவற்றில் போட்டிகள் நடாத்தி பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் எமது பாரம்பரிய கலைகள் வளர்க்கப்படுகின்றது.

மேலும், வைத்திய முகாம்கள், சிவராத்திரியின் போது கோப்பி பிரசாதம் வழங்குதல், ஆன்மீக உரைகளை ஏற்பாடு செய்தல், ஆன்மீக பெரியார்களை வரவேற்று கௌரவித்தல் போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளையும் மாத்தளை சைவ மகா சபை செய்து வருகின்றது.

இலங்கையின் மத்திய மலை நாட்டை எடுத்து நோக்குமாயின் குறிப்பாக மாத்தளை மாவட்டத்தில் வேறு மதங்களை தழுவும் இந்து மக்களின் தொகை அதிகமாக காணப்படுகின்றது. எனவே, மாத்தளை மாவட்டத்தின் பின் தங்கிய பகுதிகளில் வாழும் இந்து மக்கள் அனைத்து விடயங்களிலும் அரவணைக்க வேண்டிய-வர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்நோக்கங்களை அடையும் பொருட்டு நாம் குறுகிய கால திட்டங்களையும் செயற்படுத்த வேண்டியிருக்கிறது. குறுகிய கால திட்டங்களாக அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்த வேண்டும். நீண்ட கால திட்டங்களாக அவர்களின் கல்வியறிவை உயர்த்துவதும், அறியாமையை போக்குவதும் ஆகும். மேலும் சைவ சமய தத்துவங்களையும் அதன் தாற்பரியங்களையும் போதித்தல் வேண்டும். சைவ சமய தத்துவங்கள் மனிதனது அன்றாட வாழ்க்கைக்கு எப்படி உதவுகின்றது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை சைவ மகா சபை



அமர்திருப்பவர்கள் :

திரு.க.கார்த்திகேசு, திரு.சு.விஸ்வலிங்கம், திரு.மா.மருதநாயகம் பிள்ளை – (உப தலைவர்)
திரு.து.சந்திரகேரம் பிள்ளை – (செயலாளர்), திரு.கு.புண்ணிய மூர்த்தி – (தலைவர்)
திரு.இரா.கிருஸ்ணகுமார் – (பொருளாலர்), திரு.வெ.தங்கவேலு, திரு.த.கனகராஜா

பின்வரிசை – இடமிருந்து வலம்

திரு.மு.சின்னதம்பி, திரு.ச.கணேந்திரன் – (உப செயலாளர்), திரு.சி.திருஅருள்செல்வன், திரு.இல.கணேசன், திரு.நா.திருச்சேகர், திரு.க.அருநாத்,
திரு.சு.பாலசுப்பிரமணியம், திரு.மா.தியாகராஜன், திரு.பொ.செல்வரட்ணம், திரு.பூ.இராமச்சந்திரன், திரு.கா.பாலசுந்தரம்,
திரு.லெ.கவியரசன், திரு.ச.சுப்பிரமணியன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக ஈடேற்றத்திற்கு எப்படி உதவுகின்றது, என்பதை மக்களுக்கு போதித்தல் வேண்டும். மேலும் பக்திப் பெருவிழாவை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் சமயத்திறன் போட்டிகள் நடாத்தப்படுகிறது.

இதன் அடிப்படையிலேயே மாத்தளை சைவ மகா சபை மாணவர்களின் கல்வியிலே அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றது. மேற்படி திட்டங்களை விரிவுபடுத்தி செயற்படுவதாயின் எமது நிதி நிலைமையை மேலும் உயர்த்திக் கொள்வது இன்றியமையாததாகும். எனவே எமது சமூகத்தின் மேல் அக்கறையுடைய தாங்களின் உதவிகள் கிடைக்கப்பெறுமாயின் நாங்கள் நன்றியுடையோராயிருப்போம்.

நன்றி

**சைவ மகா சபை மாத்தளை**



மாத்தளை, கந்தேநுவர தமிழ் மகா வித்தியாலயத்தில் 2013ம் ஆண்டு நடைபெற்ற பொங்கல் விழா நிகழ்வில் மாணவர்களின் விவாத அரங்கு நிகழ்வின் போது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்ச விதி

இந்த மகா பிரபஞ்சத்தில் நவக்கிரகங்களுடன் இணைந்து 10ஆவது கிரகமாக சுழன்று கொண்டிருக்கும் இந்த பூமியில் தனது கர்மாவை நீக்கி மோச்சப் பேறினைப் பெறும் நோக்கிய பிறவி எடுக்கும் அனைத்து ஜீவராசிகளும் நான்கு வழிகளிலே தோன்றுகின்றன.

அவையாவன :

1. நிலத்தை பிளந்து வெளியில் வருபவை.
2. பிசுபிசுப்பான ஈரத்தன்மை கொண்ட மண்ணில் இருந்து தோன்றுபவை.
3. முட்டையில் இருந்து தோன்றுபவை.
4. தாயின் கருவில் இருந்து தோன்றுபவை.

இப்படியாக பிறவியெடுக்கும் போது இவை அனைத்தும் ஒரு ஒழுங்கில் தனது அறிவிற்கு ஏற்ப நிரல்படுத்தப்படுகின்றன. அவை கீழிருந்து உயர் நிலையை நோக்கிச் செல்லும் ஒழுங்கு படுத்தியதாகும். அதாவது,

1. தாவரங்கள்
2. நீர் வாழ் உயிரினங்கள்
3. ஊர்வணவை
4. பறவை இனங்கள்
5. விலங்குகள்
6. மனிதர்கள்
7. மனித நிலையில் இருந்து உயரும் தெய்வ நிலை
8. தெய்வங்கள்
9. இறைவன்

ஆக தாவரம் முதற்கொண்டு விலங்குகள் வளர தன்னிலை உணர்ந்து அவற்றின் கடமைகளை செவ்வனே செய்து தன்னை அடுத்த நிலைக்கு உயர்த்திக் கொள்ளும் முயற்சியின் முழுமையாக தன் வாழ்நாளை அர்ப்பணித்த போதும் மனிதன் மட்டுமே அனைத்தும் அறிந்த நிலையினும் இப்புவியில் பிறந்த நோக்கத்தை மறந்து உடல் இன்பத்திற்காக வாழ்கின்றான்.

இதனால் பிறர் மேன்மைகண்டு பொறாமை, புலன்கள் போகும், விழிச் செல்லும் ஆசை இவை தடைபடும் போது வரும் கோபம் கோபத்தில் பிறக்கும் தீச்செயல் என மனிதன் மீள முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரத்தில் வீழ்ந்து அறம் தவறி வாழ்கின்றான். இதை நான் திருவள்ளுவர்

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

என அழகாகச் சொல்லுகின்றார்.

எனவே நாமும் மிகப் பெருமைகுட்பட்டதும், இறைவனால் மிகவும் விரும்பப்படுவதுமான இந்த மனிதப் பிறவியை புனிதபடுத்தி ஆத்ம பரிசுத்தத்தை அடைவோமாக.

**லெ.கவியரசன்**
*மாத்தளை*



**தம்பலகல கணேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற மருத்துவ முகாம் நிகழ்வு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத மாற்றம் ஏற்றுக்கொள்ளக் கூடியதா ? ஓர் ஆய்வு

கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கு முற்பட்டதே இந்து சமயமாகும். ஆன்மீக வாதிகளைப் பொறுத்தவரை ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியை போல தோற்றமும் முடிவும் இல்லாதது இந்து மதமாகும். மதம் என்பது சம்மதம் எனப்படும். மதங்கள் மனிதனை நெறிப்படுத்தி அவனை வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழி செய்கின்றன. மனிதனின் மன ஒருமைப்பாட்டின் வெளிப்பாடே மதமாகும். உலகில் பல மதங்கள் காணப்படுகின்றன. இலங்கையை பொறுத்தமட்டில் இந்து பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் எனும் நான்கு மதங்கள் காணப்படுகின்றன.

இன்றைய நவீன உலகில் மதமாற்றம் என்பது பரவலாக நடைபெற்று வரும் ஒரு விடயமாக மாறிவிட்டது. மதமாற்றம் உண்மையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதா? என்று நோக்கின் பலரது கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்பதாகவே உள்ளது. இன்றைய மதம் பற்றிய ஆய்வுகளை எடுத்துப் பார்தோமேயானால் அதிகமாக மதம் மாறுவது இந்து மக்களே என்பது கவலைகுரிய விடயமாகும். இதனால் இன்று இந்து மதம் அருகி வரும் மதமாக காணப்படுகிறது.

மதம் மாறுபவர்கள் மதமாற்றத்திற்கு பல்வேறு காரணங்களை சுட்டிக் காட்டுகின்றனர். இந்து மதத்தை எடுத்துக்கொண்டால் இந்து மதத்தில் காணப்படும் பூசைகள், கிரியைகள் என்பவற்றால் மதம் மாறுபவர்கள் பலர் உள்ளனர். பூசைகள் கிரியைகளுக்கு அதிக செலவு, காலம் தேவைப்படுவதால் அது மக்களின் அன்றாட வாழ்வை பாதிப்பதாகக் கருதி மதம் மாறுகின்றனர்.

ஜாதிகளும் மதமாற்றத்திற்கு காரணமாக அமைகின்றன. ஆலயங்களில் செய்யப்படும் கிரியைகளை பிராமணர்கள் மட்டுமே செய்ய முடியும் என்ற கட்டுப்பாட்டு எம் மதத்தில் காணப்படுகின்றது. மேலும் சில கிரியைகள் சில ஜாதியினருக்கே என்ற வரையறை காணப்படுகிறது. இந்தியாவிலேயே இது அதிகமாக காணப்படுகின்றது. குறிப்பிட்ட ஜாதியினருக்கு ஆலயங்களில், சமூகத்தில் தகுந்த அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. உதாரணமாக பிராமணர்களை தவிர வேறு யாரும் கடவுளுக்கு பூஜை செய்ய முடியாது. இதனால் சிலர் மதத்தை வெறுக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதமாற்றத்திற்கான காரணங்களை ஆராய்ந்தோமானால் சிலர் மேல்நாட்டு கலாசாரத்திலும், நவநாகரிகத்திலும் தம்மை துளைத்து மதி மயங்கி மதம் மாறுகின்றனர். இந்து, இஸ்லாம் மதங்களில் சில சட்ட வரையறைகளும் கட்டுப்பாடுகளும் காணப்படுகின்றன. ஆனால் மேலைதேய கலாசாரத்தைக் கொண்ட மதங்களில் இச் சட்டவரையறை காணப்படுவதில்லை. இதனால் முக்கியமாக இளைஞர்களும் யுவதிகளும் மதம் மாறுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இவ்வாறு இளம் சமூகம் மதம் மாறுவதனால் மதத்தின் எதிர்காலமே கேள்வி குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலைத்தேய மதங்களில் உடைகளில் சிலர் மயங்கி அம்மதத்திற்கு மாறுவதை அவதானிக்கலாம். இஸ்லாம் மதத்தை எடுத்துக்கொண்டால் பெண்கள் தமது உடல் பாகங்களை வெளியில் தெரியாதவாறும் கட்டுக்கோப்புடன் ஆடை அணிய வேண்டும். என இஸ்லாம் வலியுறுத்துகிறது. இக்கட்டுக்கோப்புகள் பிடிக்காத காரணத்தினால் பலர் மதம் மாறுகின்றனர்.

வறுமையில் வாடும் மக்கள் உதவிகள் செய்யும் மதங்களுக்கு மாறுவதை நாம் எம் வாழ்நாளிலே கண்டிருக்கின்றோம். கிறிஸ்தவ மதத்தை எடுத்துக்கொண்டால் கிறிஸ்தவர்கள் தம் மதத்திற்கு மக்களை சேர்ப்பதற்காக வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தல், படிக்கும் பிள்ளைகளுக்கு கல்விக்கு பல உதவிகளை செய்கின்றனர்.இதனால் வறுமையில் வாடும் மக்கள் தம் மதத்தை விட்டு இம்மதங்களுக்கு மாறுகின்றனர். இவ்வாறு உதவிகள் செய்வது இந்து மதத்தில் குறைவாகக் காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும். தமது சொந்த தேவைகளுக்காக மதம் மாறுவது உண்மையில் சரியானது தானா? என்று சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சிலர் ஏனைய மதப் பிரசாரங்களை கேட்டு அதில் மயங்கி தம் மதத்தை துறக்கின்றனர். இவ்வாறு செய்பவர்கள் தமது மதப் பற்றிய சரியான விளக்கம் பெறாதவர்களே! இரண்டு நாள் பிரசாரங்களுக்கு சென்று விட்டு மூன்றாவது நாள் அம்மதத்திலே சேருகின்றனர். இவ்வாறு செய்பவர்கள் இந்துக்களே என அறியும் போது அதிர்ச்சியளிக்கின்றது. இதற்கு காரணம் இந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் தம் கடமையை சரிவர செய்யாமையே காரணமாகும்.

சிலர் நோய் நொடிகள் குணமாகும் என்ற நம்பிக்கையில் மதம் மாறுகின்றனர். சிலர் எமது மதத்திற்கு மாறினால் நோய்களை குணப்படுத்த முடியும் என்ற மதபிரசாரத்தை நம்பி மதம் மாறுகின்றனர். உண்மையில் மதம் மாறுவதால் அவர்களது நோய்கள் குணமடைந்து விட்டனவா? என்று ஆராய்ந்தோமேயானால் இல்லை என்ற பதிலையே எதிர்பார்க்க முடியும். "இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை" என்ற நிலைத்தான் இம்மக்களுக்கு ஏற்படும். நோய்கள் நாமே ஏற்படுத்திகொண்டவை. இவற்றை குணப்படுத்துவதற்கு மதமாற்றம் தீர்வாகாது என்பதை உணர வேண்டும்.

இன்று பெருமளவு மதமாற்றம் நிகழ முக்கிய காரணம் கலப்புத் திருமணங்களாகும். ஒரு மதத்தில் இருக்கும் ஒருவர் வேறொரு மதத்தில் இருப்பவரை மணப்பதால் இந்நிலை உருவாகியுள்ளது. இது இளம் சமூகத்தினரிடமே அதிகமாக நிகழ்கிறது. உதாரணமாக இந்து மதத்தில் இருக்கும் ஒரு ஆண் இஸ்லாம் மதத்தில் இருக்கும் ஒரு பெண்ணை மணப்பதால் அவ்வாணும் இஸ்லாம் மதத்திற்கே மாற வேண்டிய நிலை உருவாகியுள்ளது. உண்மையில் மதம் மாறுவது தவறானது என்றாலும் கூட ஆண் இருக்கும் மதத்திற்கே பெண்ணும் வர வேண்டும். ஆனால் இஸ்லாம் மதத்தை பொறுத்தவரை இருவருக்கும் இஸ்லாம் மதத்திலே சேர வேண்டும் என்ற கட்டாயம் காணப்படுகின்றது. இவ்வாறு திருமணம் முடிப்பவர்களும் நீண்ட காலம் சந்தோசமாக வாழ்க்கை நடத்துகின்றனரா? என்று இந்தியாவிலுள்ள ஒரு பல்கலைகழகம் ஆய்வு நடத்திய போது இல்லை என்ற முடிவையே அவர்கள் ஆய்வுகளில் பெற்றனர். இதன்படி நோக்கும் போது கலப்பு திருமணத்தால் மதம் மாறுவது ஏற்புடையதா என்று இளம் சமூகம் சற்றே ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

சமூகத்தில் நடைபெறும் சில நடவடிக்கைகளும் மதமாற்றத்திற்கு காரணமாக அமைகின்றன. சில பாடசாலைகளில் சேர்வதற்கு திறமையை கருத்தில் கொள்ளாமல் மதத்தையே கருத்தில் கொள்கின்றனர். கிறிஸ்தவ மதத்தவருக்கே சிறந்த பாடசாலைகளில் கல்வி கற்க உரிமை வழங்கப்படுகிறது. இதனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுடன் சேர்ந்து சில பெற்றோரும் மதம் மாற தலைப்படுகின்றனர். இங்கே மதமாற்றம் தேவையானதாகக் கருதப்படுகிறது.

பல்கலைகழகம் செல்வதிலும் கூட மதம் செல்வாக்குச் செலுத்துகிறது. பல்கலைகழகம் செல்வதில் அதிக வாய்ப்பு பௌத்த சிங்கள மக்களுக்கே கிடைக்கப்பெறுகிறது. இதனால் ஏனைய தமிழ் இனத்தைக் கொண்ட மதத்தவர்கள் திறமை இருந்தும் பல்கலைக்கழக வாய்ப்பை தவற விடுகின்றனர். இதனால் சிறுவயதிலே ஏனைய மதத்தவர்கள் பௌத்த மதத்திற்கு மாறுவதை அவதானிக்கலாம். இங்கே மதமாற்றம் ஏற்புடையதாக அமைகிறது என்றால் அது மிகையாகாது.

இஸ்லாம் பெண்களுக்கு இஸ்லாம் மதத்திலே பல சட்டவரையறைகள் காணப்படுகின்றன. இதனை வெறுக்கும் பெண்கள் தம் மதத்தை வெறுத்து ஏனைய மதங்களுக்கு மாறுவதை அவதானிக்கலாம்.

தொகுத்து நோக்கின், மதமாற்றம் ஏற்புடையதல்ல என்றே கூற வேண்டும். இன்று உலகில் நடைபெறும் பல்வேறு கலாசார சீரழிவுகளுக்கும் மதமாற்றம் முக்கிய காரணமாக அமைகின்றது என்றால் அது மிகையாகாது. இளம் சமூகம் ஒரு குறிக்கோளில்லாத நிலையில் காணப்படுவதற்கு மத மாற்றம் காரணமாகும்.

இந்நிலை மாற வேண்டும். மதமாற்றம் நிகழ்வதை தடுக்க வேண்டியதை ஒரு சிறந்த எதிர்காலம் மிக்க தலைவர்களை உருவாக்க எத்தனிக்கும் ஒவ்வொரு மக்களதும் தலையாயக் கடமையாகும். மதங்கள் ஏனைய மதத்தவர்களை தம்மதத்திற்கு மாற்றலில், தம மதத்தை போன்றே ஏனைய மதங்களையும் நினைக்க வேண்டும். எம்மை இவ்வுலகிற்கு அளித்த தாயை நாம் போற்றுவது போல எமது அடையாளமான மதத்தையும் போற்ற வேண்டும். சமய நிறுவனங்கள் எம் மதத்தவரின் கஷ்டங்களை உணர்ந்து அவர்களது கஷ்டங்களைப் போக்க முன்வர வேண்டும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று உணர்ந்து செயற்பட வேண்டும்.

தமது சொந்த தேவைகளுக்காக மதம் மாறுவதை தவிர்ந்து மதத்தைப் போற்றிப் பாதுகாப்போமாக!

**செல்வி.D.சிவசங்கரி**
இறத்தோட்டை இந்து மகா வித்தியலயம்
இறத்தோட்டை.

**இக்கட்டுரை 2016 பக்திப் பெருவிழா பாடசாலை மட்ட போட்டியில் மேற்பிரிவில் 1ம் இடம் பெற்றது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் மத்தியில் இறைவழிபாடு

மனிதராக பிறந்த ஒவ்வொருவருக்கும் இறைவழிபாடு இன்றியமையாததாகும். இவை எல்லா மதத்திற்கும் உரிய ஒரு சொல், செயற்பாடு எனக் கூறலாம். நாம் பொதுவாக இந்து மதத்தை எடுத்துக்காட்டினோமானால் இந்து மக்களுக்கு இறைவழிபாடு செய்ய ஏற்ற இடமாக ஆலயம் விளங்குகிறது. இந்து மதத்தில் இறைவழிபாட்டால் பல சித்தர்கள், நாயன்மார்கள், குரவர்கள் போன்றவர்கள் முக்தியடைந்துள்ளனர். "நாம் ஏன் இறைவழிபாடு செய்தல் வேண்டும்?"

இறைவழிபாடு என்பது இந்து மதத்திலுள்ள ஒரு புனிதமான சொல் ஆகும். நாம் வீட்டில் பூஜை அறையில் மலர்கள் இறைவனுக்குச் சாத்தி, தூபதீபம் காட்டி, தோத்திரம் பாடுதலே இறைவழிபாடு ஆகும். இறைவழிபாடு மனிதனுக்கு பல நன்மைகள் அளிக்கின்றது. இறைவழிபாடு பல வகையாக வகைப்படுத்தி மனிதர்களாகிய நாம் வழிபடுகின்றோம். நாம் யாதாவதொரு பரீட்சையில் சித்திபெற, காரியங்கள் கைகூட "நேர்த்தி" எனும் வழிபாட்டை மேற்கொள்கின்றோம். முக்கியமான பெரியவர்களிடம் உள்ள இறைவழிபாட்டினை விட இளைஞர்கள் மத்தியிலிருந்து இறைவழிபாடு தற்போது பிளவுப்பட்டே காணப்படுகிறது.

இளைஞர்களுக்கு இறைவழிபாடு மிகவும் அவசியமாகும். தற்போது இளைஞர்களிடம் உள்ள இறைவழிபாட்டைக்காணக் கூடியதாக இல்லை. எதிர்கால இளைஞர் சமுதாயம் தற்பொழுது சீர் குலைந்து காணப்படுகிறது. இச்சமுதாயம் இறை வழிபாட்டிலும், அவர்களது நடத்தைகளையுமே பாதிக்கின்றது. இவ்வாறான பாதிப்புகளுக்கு முக்கியமான காரணமாக தொலைதொடர்பு சாதனங்களே காணப்படுகிறது. உதாரணத்திற்கு இளைஞர்கள் ஆலயத்திற்குள் வந்தவுடனேயே அவர்களுடைய நண்பர்களைச் சந்தித்து கூட்டம், கூட்டமாக அங்குமிங்கும் திரிதல், ஆலயத்திற்கு கலாசார உடை அல்லாது வேறு உடைகளை அணிந்துக்கொண்டு இருப்பர். சிலர் ஆலயத்தில் ஒரு ஒதுக்குப்புறமாக நின்று கையடக்கத் தொலைபேசியில் விளையாட்டுக்கள் விளையாடுகின்றனர். அதுமட்டுமன்றி ஆலய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக் காலங்களிலே அல்லது வேறு பூஜைகள் நடாத்தும்போது இளைஞர்கள் இறைவழிபாட்டை மேற்கொள்ளாது இறைவனைப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருப்பர். இவ்வாறான தொலைதொடர்பு சாதனங்களால் ஏற்படும் நன்மைகளை மட்டுமே நாம் அறிகின்றோம். அதனால் ஏற்படும் விளைவுகளை நாம் ஏற்க மறுக்கின்றோம். சிலர் ஆலயத்திற்கு வருகை தராமலே இணையம் மூலமாக அல்லது நிலைநிகழ்வு (Online) மூலமாகவே ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்களை காணுதல் போன்றவையாகும். இளைஞர்களுக்குக் கல்வி மிக அவசியமானவை. ஆதலால் இளைஞர் சமுதாயம் சீர்குலையாமலிருக்க பாடசாலையால் பல நடவடிக்கைகளைக் கையாளுதல் வேண்டும்.

அதாவது பாடசாலைகளில் இந்து சமய நாயன்மார் குருபூஜைகள் நடாத்துதல், நவராத்திரி பூஜைகள் நடாத்துதல், கூட்டுப் பிரார்த்தனை, பஜனை போன்றவற்றில் பங்களிப்பு செய்தல் போன்றவைகளாகும். உதாரணத்திற்கு வருடத்தில் ஒரு முறை வரும் சமய குரவர் நால்வரில் ஒருவரின் குருபூசை தினத்தன்று பாடசாலையில் இத்தினத்தைக் கொண்டாடுதல். இவ்வாறு குருபூசை நடாத்தும் போது அங்கு மாணவர்கள் எல்லோரும் ஒன்று கூடுவர். அப்போது அங்கு ஒற்றுமை நிலவும். ஒன்று கூடி பிராத்தனை செய்யும் போது தோத்திரம் பாடுதல் இடம்பெறும். அப்போது இசைக்கப்படும் தேவாரங்களை மாணவர்கள் கேட்டறிவர். பிறகு மாணவர்களிடையே பல சந்தேகங்கள் நிலவும். ஏன் இவ்வாறான குருபூசை நடாத்தப்படுகிறது? என யாரிடமாவது கேட்டறிய முற்படுவர். அப்போது எமது நாயன்மார்களில் வரலாற்றைப்பற்றியும் அவர்கள் செய்த அற்புதங்களையும், இறைவழிபாட்டின் மகிமைகளையும் அறிவர். அன்று முதல் யாதாவதொரு உறுதிமொழி எடுத்துக்கொள்வர். இவ்வாறு கூட்டுப்பிராத்தனை நடாத்தப்படும். அப்போது இளைஞர்களிடையே சகிப்புத்தன்மை ஏற்படும். நாம் இறைவனை வழிபாடு செய்யாது சென்றால் யாதொரு காரியமும் சித்தி பெறாது.

"கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது நாம் இறைவனை வழிபட்டு கல்வியில் மட்டுமே ஆர்வம் காட்டினோமானால் அதனால் யாதொரு பயனும் இல்லை என்பது திருவள்ளுவரின் வாக்காகும்.

ஆதலால் இந்து இளைஞர்களாகிய நாம் இறைவழிபாட்டுடன் எமது இந்து கலாசாரத்தையும், பண்பாட்டையும் காப்போமாக...

செல்வன்.R.யதுர்ஷன்
மா/சாஹிரா தேசிய கல்லூரி,
மாத்தளை.

**இக்கட்டுரை 2016 பக்திப் பெருவிழா பாடசாலை மட்ட சமயத்திறன் போட்டியில் மத்திய பிரிவு II இல் 1ம் இடம் பெற்றது.**




**பிரதேச ரீதியாக நடாத்தப்பட்ட பொங்கல் விழா நிகழ்வில் பெற்றோர்கள் கோலம் போடும் காட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்தளை சைவ மகா சபை
## 1957ம் ஆண்டு 3ஆம் வருட மஹா சிவராத்திரி விழா
## அழைப்பிதழின் பிரதி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**1963ம் ஆண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளார் இலங்கைக்கு வந்த போது, மாத்தளை சைவ மகா சபைக்கு அழைத்து வந்து, மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் மேடை அமைத்து சொற்பொழிவு ஆற்றுவதையும், ஆற்றிய சொற்பொழிவையும் இங்கு பார்க்கலாம்.**

## மாத்தளையில் .....

ஆன்டாக்களுக்கு ஆசையதிகம். மனிதர்களுக்கிருக்கும் ஆசையை அளவிட்டு உரைக்கவியலாது. ஆசையை அழித்து விடுதல் என்பதில் நம்பிக்கையில்லை. எந்த மனிதனுக்கும் ஏதாவது ஒன்றில் ஆசை இருக்கத்தான் செய்யும். எல்லா செல்வங்களையுமேற்று உண்டு, உடுத்து, உறங்கி வாழ விரும்புகின்றனர். சிலர் செல்வாக்குப் பெருக்கால் சிறந்த பதவிகளைப் பெற்று வாழ ஆவல் கொள்கின்றனர். சிலர் நாட்டை ஆளும் பேற்றினைப் பெற்று நனிசிறந்த தலைவர்களாக வாழ விரும்புகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு வகையான ஆசைகளுடன் மனித இனம் அலைந்து கொண்டிருக்கின்றது.

நாமுங்கூட நல்ல அருள்நெறி வாழ்வு வாழ்ந்து அறச்செல்வர்களாகத் திகழ்பவர்களைக் காண ஆசைப்படுகின்றோம். ஆசையைப் பொறுத்தமட்டில் நாம் கைக்கொள்ள வேண்டியது ஒன்றேயொன்று. அதுதான் எல்லை. எதற்கும் ஒரு வேலி எல்லை வரையறை தேவைப்படுவது போலவே ஆசைக்கும் ஓர் எல்லை வரையறை அவசியம் வேண்டும். மனிதனின் ஆசையுணர்வு அளவுக்கு அதிகமாக எல்லை கடந்து செல்கிறபோது ஆபத்து நேருகின்றது. ஒரு வரையறையுடன் எந்த உயிருக்கும் இன்னலற்ற முறையில் நன்மை பயக்கும் வகையில் ஆசை உருவெடுத்தால் அது போற்றப்பட வேண்டியதே.

மனிதனைக் குரங்குக்கு ஒப்பிடுவார்கள். இப்போதைய மனிதர்களில் சிலரைக் குரங்கோடு ஒப்பிடவும் முடிவதில்லை. இப்போதையச் சில மனிதர்களை விட குரங்கு எவ்வளவோ உயர்ந்த இடத்தை பெற்றிருக்கின்றதெனலாம். குரங்கினது இயல்பு வெள்ளிடைமலை. கொம்பு விட்டு கொம்பு தாவுவது அதன் இயல்பான செயல். அஃது ஒரு கொம்பை விட்டு விட்டுத்தான் தாவுகிறது. ஆனால், அளவு கடந்த ஆசை வழிப்பட்ட மனிதனோ ஒன்றை விட்டு ஒன்றை பற்ற முயல்வதில்லை. எல்லாவற்றிற்கும் ஒரு சேரப் பற்றி நிற்க விரும்புகின்றான். இந்த எல்லை கடந்த வரம்பு மீறிய ஆசைப் பெருக்கினால்தான் அவன் பல அல்லல்களுக்குள்ளாக வேண்டியிருக்கின்றது.

அருமையான ஓர் ஆங்கிலக் கதையுண்டு. பொன்னிலே ஆசைக் கொண்டவன், தான் தொட்டதெல்லாம் பொன்னாக விரும்பி இறைவனிடத்திலே வரம் வேண்டித் தவமிருந்தான். துன்பங்கள் பலவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கி தவமிருந்ததால் இறைவன் எழுந்தருளினார். "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டருளினார். "யான் தொட்டதெல்லாம் பொன்னாக அருள்பாலிக்க வேண்டும்." என்று பக்தியுடன் விண்ணப்பம் செய்தான். இறைவன் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றி மறைந்தருளினார்.

வரம் பெற்ற நேரம் தொடங்கி, வகை வகையான பொருட்களைத் தொட்டு அவைகளை பொன்னாக்கினான். பொன்குவியல் நிறைய நிறைய தொட்டு அவனது பூரிப்பு அளவு கடந்து அவனது உடலையே பூரிக்க வைத்தது. மகிழ்ச்சிப் பெருக்கு அவனைப் புது மனிதனாக்கியது. பசியெடுத்தது. உணவுக்கு பக்கத்திலே போய் உணவைத் தொட்டான். அவ்வுணவும் பொன்னாகியது. பசி அவனை வாட்டி வதைக்க கவலை தலை காட்டியது. சாப்பிட முடியாத நிலை வந்து விட்டதை எண்ணி ஏங்கினான். இந்த வருத்தத்தோடு வேறொரு வருத்தமும் காத்திருந்தது. பக்கத்தில் நின்ற தன் பிள்ளையையும் தொட்டான். அதுவும் பொன்னாகியது. ஆசை வெறியால் ஆண்டவனிடம் கேட்டுப் பெற்ற வரம், வயிற்றுக்குள் சோறையே அனுப்ப முடியாமற் செய்து விட்டதை நினைத்து"ஆண்டவனே! வயிற்றுக்கு உணவு கிடைத்தாலே போதுமானது" என அரற்றினான். ஆகவே ஆசைக்கு கட்டுப்பாடு தேவை.

ஆசையை ஒழித்துவிடு என்பதைக் காட்டிலும் ஆசைக்கு எல்லை வகுத்துக்கொள் என்பது சாலச் சிறந்தது. ஏனெனில், ஆசை மனிதனைப் பொறுத்தமட்டில் ஒழிக்க முடியாதவொன்று. ஒரு சில நன்மைக்காக ஒரு சிலர் ஆசையுணர்வுக்குத் தடை விதிக்கலாம். பொதுப்படையாக சமுதாய வாழ்வில் ஆசையை அழிக்க முயல்வது முடியாத காரியம். வரையறை செய்து கொண்டு வாழ்வதே இயலும்.

அன்பை, அறத்தைப் பேணி வாழ நாம் ஆசைப்பட வேண்டும். அறஞ்செய்வதற்காகவே வாழ்கிறோம் என்ற நினைப்போடு அறமற்றவைகளை அறவே தள்ளி இன்பத் தமிழ் நாட்டினுடைய இணையற்ற பண்பினைக் காக்க ஆசைகொள்ள வேண்டும்.

"அறத்தால் வருவதே இன்பம்" என்ற கோட்பாட்டுக்குத் தலை சாய்த்து வாழ்ந்ததனாலே தொன் பழந்தமிழகம் பாரில் உயர்ந்து பண்பு வழிச் சிறந்திருந்தது. அகத்திலே அன்பை வளர்க்கவும் வாழ்வுக்கு ஒரு கொள்கை, ஓர் ஒழுங்கு வேண்டும். அத்தேவைகளைச் சமயவாழ்வினாலேயே பெறமுடியும். ஒரு மனிதனுக்கு நல்ல கொள்கைப் பற்றும், ஒழுக்கமும் வாய்த்தவுடன் பிறர் நலம் பேணுகின்ற மனப் பண்பு உண்டாகும். அந்த மனப் பண்பு பிறர்க்குத் துன்பம் கொடுக்காமல் வாழ்வதோடு, பிறர் தருந் துன்பத்தைப் பொறுக்கும் வெற்றியையும் நல்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரின் சமயப் பண்பு தன்னிகரில்லாதது. தலையாயது. அது பாவம் செய்யாதே என்று போதிக்காமல் பாவம் செய்ய நினைக்காதே என்கிறது. அது போலவே கொலை செய்ய நினைக்காதே, திருட நினைக்காதே என்கிறது. கொலை செய்தால், திருடினால் பாவம் என்று சொல்லாமல், அவற்றை மனத்தில் நினைத்தாலே பாவம் என்று கூறுகிறது. இதிலிருந்து தமிழருடைய சமயநெறி சமுதாயத்தில் அன்பையும், அறத்தையும் உருவாக்க உழைத்திருக்கிறதென்பது புலனாகிறது. ஆன்மீக ஈடேற்றத்துக்குத் தமிழர் சமயம் தலைசிறந்த வழிகளைக் காட்டியிருக்கிறது. வழி வகைகளைக் காட்டியதோடமையாது, அவ்வழிப்பட்டு வாழ்ந்து வளமான நிலையையும் பெற்றிருக்கிறது. புறவாழ்வின் சிறப்புக்கு அகவாழ்வின் துணை இன்றியமையாததென்பதை உணர்ந்து உணர்த்திய சமயம் தமிழர் சமயம். அகப்புரட்சியின் பயனாகவே புறவாழ்வைத் தூய்மையுடையதாக ஆக்க முடியுமென்று எண்ணிச் செயல்பட்ட பண்பு பாராட்டி மகிழ்தற்குரியது.

சில வீடுகளிலே வெளிச்சுவர்களுக்கு வெள்ளையடித்து உட்சுவர்களைப் புறக்கணிக்கிறார்கள். வெளிச்சுவர், பார்ப்பவர்களின் பார்வையை ஈர்க்குமேயொழிய அவ்வீட்டில் வாழ்பவர்களுக்கு பயன்தராது. உட்சுவர் தூய்மையற்று இருந்தால் வீட்டிலுள்ளவர்களின் நல்வாழ்வு பாழ்பட்டுபோகும். ஆகவே உட்சுவரின் தூய்மையைக் கவனித்த பின்பே வெளிச்சுவரைத் தூய்மையாக்க முனைய வேண்டும். மனித வாழ்விலுங்கூட அகவாழ்வைப் பற்றிய சிந்தனைக்குப் பின்பே புறவாழ்வை பற்றிய எண்ணம் எழ வேண்டும். அது மனித மரபு. தமிழ் மரபு. புறப் புரட்சியின் வெற்றிக்கு அகப்புரட்சி துணை செய்யும். மணிவாசகர் போன்ற அனுபூதிமான்கள் அகத்துறைப் புரட்சியையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து உயர்ந்தார்கள். எனவே, ஆசைக்கு வரையறை வகுத்து, அன்பும், அறனும் கொண்ட வாழ்வு வாழ்ந்து, புறவாழ்வின் தூய்மைக்கு இன்றியமையாத அகவாழ்வை ஆன்மீக வாழ்வைத் தூய்மையாக்கித் துன்பம் கண்டவிடத்துத் துடித்து, உடுக்கை இழந்தவன் கைபோல விரைந்து வேண்டியதை செய்து என்றும் எல்லா உயிர்களிடத்தும் பற்று வைத்து வாழ வாழ்த்தி விடை பெறுகின்றோம்.

வணக்கம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்
தமிழ்நாடு - இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்ட ஆலயங்கள்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது எமது முன்னோர் வாக்கு. ஆலயங்கள் தான் மனிதனை நேர் வழியில் வாழ வழிகாட்டுகின்றது. தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர் குடியிருப்புக்கண்மையில் சிறிய அளவிலான ஆலயங்களை பெரிய கங்காணிமார் காலத்தில் கட்டி வழிபட்டு வந்தனர். காலஞ் செல்லச் செல்ல நாகரிக வளர்ச்சி காரணமாக சிறிய ஆலயங்களை உடைத்து பெரிய அளவில் கட்ட வேண்டும் எனத் தீர்மானித்து உடைக்கப்படுகிறது. இது நல்ல விடயம். ஆனால், முறையாக திட்டமிட்டு இதனை செயற்படுத்தாமையினால் பல வருடங்கள் முடிவடைந்தும் கட்டி முடிக்கப்படாத ஆலயங்கள் பல உண்டு.

தோட்டத்தில் தொழில் புரிகின்ற தொழிலாளர்களின் சம்பளப் பணத்தில் தொழிலாளர்களின் அனுமதியோடு குறிப்பிட்ட ஒரு தொகை பணம் மாதாமாதம் கழிக்கப்பட்டு ஆலய நிர்வாகத்திடம் கையளிக்கப்படுகிறது. தோட்டமொன்றில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வருடமொன்றிற்கு பெறப்படும் பணம் எவ்வளவு? கட்ட போகின்ற ஆலயத்திற்கு வேறு எங்கேயாவது இருந்து நிதியுதவி கிடைக்குமா? என்பதை திட்டமிட்டு கோயிலை உடைப்பதற்கு முன் மொத்தமாக தேவைப்படும் பணம் எவ்வளவு? எவ்வளவு காலத்திற்குள் கட்டி முடிக்கலாம்? என்பதைத் திட்டமிட்டு, பணத்தை எழுபது சதவீதம் சேகரித்து அதன்பின் உடைப்பது சிறந்ததாகும்.

இதேவேளை சொந்தபகை, கட்சி பூசல் காரணமாக தனது சம்பளத்தில் பணம் கோயிலுக்கு அறவிட வேண்டாம் என தோட்ட நிர்வாகத்திற்கு கடிதம் கொடுப்பவர்களும் உண்டு. திட்டமிடலில் ஏற்படுகின்ற தவறு காரணமாக வேலைகள் முடிவடைய காலதாமதப்படுவதால் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாற்று மதத்தினர் ஊடுருவி தமது சமயக் கருத்துக்களை பரப்பி மதம் மாற்ற முனைவதையும் காணக்கூடியதாக உள்ளது.


கோயில் கட்டி முடிவடைந்ததும் கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் என்பன வெகு சிறப்பாக நடைப்பெற்று வருகின்றன. அதன் பின் ஆலயத்துக்கு செல்லும் மக்களின் தொகை குறைவடைகின்றது. நேரசூசி ஊடாக ஒவ்வொரு நாளும் சாதாரண பூசை நடைபெறுவதற்கு மக்களை தெரிவு செய்வது கட்டாயமான தொன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான பயிற்சிப் பெற்ற பூசகர்களை நியமித்து வழிபாடு நடாத்துவதும், வெள்ளிக்கிழமை மாலை குறித்த நேரத்தில், குறிப்பிட்ட காலத்துக்குள் சமய சொற்பொழிவு ஒன்றினை ஏற்பாடு செய்வதும் கட்டாயமானதாகும்.

காலத்தால் முந்திய எமது சமயத்தை கட்டிக்காத்து எமது எதிர்கால சந்ததியினரும் போற்றும் வண்ணம் செய்வது சைவசமயினர்களாகிய நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

ஆக்கம் :
மாணிக்கம் தியாகராஜன் (M.A Tamil)
அதிபர் - மா/எல்கடுவ த.ம.வி
மாத்தளை



**சைவ மகா சபையினால் நடாத்தப்பட்ட**
**1995 காலப்பகுதியில் நடாத்தப்பட்ட திருவள்ளுவர்**
**குரு பூசையின் நிகழ்வின் போது திருவள்ளுவர் திருவுருவப்படம்**
**ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் காட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்திப் பெருவிழா- 1 இல் கௌரவிக்கப்பட்டோர் விபரம் ( 2012 )

1. கௌரவ . க.கார்த்திகேசு அவர்கள்
2. கௌரவ . அ.விஸ்வலிங்கம் அவர்கள்
3. கௌரவ . கு.புண்ணிய மூர்த்தி அவர்கள்
4. கௌரவ . சு.சங்கரன் அவர்கள்

## பக்திப் பெருவிழா- 2 இல் கௌரவிக்கபடுபவர்கள் விபரம் ( 2016.07.24 )



கௌரவ .முத்துகிருஷ்ணன்
சபாபதி அவர்கள்



கௌரவ . மாணிக்கம்பிள்ளை
மருதநாயகம் பிள்ளை அவர்கள்



கௌரவ . முத்துகருப்பன்
சின்னதம்பி அவர்கள்



கௌரவ . காளிமுத்து
பழனிவேல் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குங்குமம் இட்டுக் கொள்வது எதற்காக?

- சுமங்கலிப் பெண்களின் தலை வகிட்டின் நுனியை சீமந்து பிரதேசம் என்பார்கள். அம்பிகையின் வகிட்டில் உள்ள குங்குமம் பக்தர்களுக்கு சேமத்தைக் கொடுக்கும்.
- சுமங்கலிப் பெண்களின் சீமந்த பிரதேசம், ஸ்ரீ மகாலட்சுமியின் இருப்பிடம். சுமங்கலிகளின் சக்தி குங்குமத்தில் உள்ளது.
- வீட்டிக்கு வரும் சுமங்கலிக்கு குங்கமம் கொடுப்பதானது, தருபவர், பெறுபவர் ஆகிய இருவரதும் மாங்கல்யத்தின் பலத்தைப் பெருக்கும்.
- குங்குமம் ஆரோக்கியமான நினைவுகளை தோற்றுவிக்கும். குங்குமம் அணிந்த எவரையும் வசியம் செய்வது கடினம்.
- பெண்கள் குங்குமத்தை தான் இட்டுக் கொண்ட பின்பு தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.
- அரக்கு நிற குங்குமம் சிவசக்தியை ஒரு சேரக் குறிப்பதாகும். திருமணப் புடவை அரக்கு நிறத்தில் இருப்பது நல்லது.
- தெய்வீகத் தன்மை, சுபதன்மை, மருத்துவத் தன்மை உள்ள குங்குமம் அணிவதால் முகம், உடல் மற்றும் மனம் ஆகியவைகளுக்கு அதிக நன்மைகளை உண்டாக்கும்.
- திருமணமான பெண்கள் நெற்றியின் நடுவிலும் வகிட்டின் தொடக்கத்திலும் குங்குமம் அணிவது சிறப்பாகும்.
- ஆண்கள் இரு புருவங்களையும் இணைத்தாற் போல் குங்குமம் அணிவது தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.
- கட்டை விரலால் குங்குமம் இட்டுக் கொள்வது மிகுந்த துணிவைக் கொடுக்கும்.
- குரு விரலால் (ஆள்காட்டி விரல்) குங்குமம் அணிவது முன்னனித் தன்மை, நிர்வாகம், ஆளுமை போன்றவற்றை ஊக்குவிக்கும்.
- சனிவிரல் (நடுவிரல்) குங்குமம் இட்டுக் கொள்வது தீர்காயுளைக் கொடுக்கும். குங்குமம் அணிவது தெய்வீகத் தன்மை, உடல் குளிர்ச்சி மற்றும் சுயக் கட்டுபாட்டிற்கு நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எலுமிச்சையின் மகிமை

ராகு காலத்தில் எலுமிச்சையை துர்க்காதேவிக்கு தீபம் ஏற்ற பயன்படுத்துகிறார்கள். சூலாயுதங்களில் எலுமிச்சை குத்தப்படுகிறது. இதற்கு காரணம் எலுமிச்சை தேவ கனி என்பதனால் ஆகும். மாம்பழத்தில் வண்டு குற்றம் உண்டு. பலாவில் வியர்வை குற்றம் உண்டு. வாழையில் புள்ளி குற்றம் உண்டு. ஆனால் எலுமிச்சையில் மட்டும் இவ்வித குற்றங்கள் இல்லை. மனிதனுடைய எண்ணங்களை ஈர்க்கும் சக்தி மற்ற கனிகளைக் காட்டிலும் எலுமிச்சைக்கு அதிகம் உண்டு.

### எலுமிச்சை விளக்கேற்றும் முறை

ராகு கால துர்க்கா பூஜையில் முதலிடம் பெறுவது எலுமிச்சை பழம் ஆகும். பழத்தை நறுக்கும்போது "ஐம்" என்ற மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். வெட்டப்பட்ட கனியை மறுபக்கம் திருப்பும் போது "க்ரீம்" என்ற மந்திரத்தை சொல்ல வேண்டும். அதில் பஞ்சு திரியை இட வேண்டும். எண்ணெய் ஊற்றும் போது "க்லீம்" மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். இந்த விளக்கை துர்க்கையின் முன் வைத்து ஏற்றும் போது " சாமுண்டாய விச்சே " என்று சொல்லி தீபம் ஏற்ற வேண்டும். விளக்கேற்றிய பிறகு கோயிலை 9 அல்லது 21 முறை சுற்றிவர வேண்டும். "ஐம்" என்ற சொல் சரஸ்வதியையும் "க்ரீம்" என்ற சொல் லட்சுமியையும், "க்லீம்" என்ற சொல் காளியையும் குறிக்கும். "சாமுண்டாய விச்சே" என்ற சொல்லுக்கு சரஸ்வதி கடாட்சம், லட்சுமி கடாட்சம், காளி கடாட்சம் ஆகியவற்றை வழங்கும் தெய்வமே என பொருள்படும்.

### சன்னதியை மறைத்து நிற்கக்கூடாது என்பது ஏன்?

ஆலய ஆகம விதிப்படி கர்ப்ப கிரகத்தினுள் இருக்கும் மூலவருக்கும் எதிரில் நந்தி இருக்கும் இடத்திற்கும் இடையில் நின்று வணங்கக்கூடாது. ஆலய சாஸ்திரப்படி மூலவருக்கு முன்னால் உள்ள நந்தியின் மூக்கிலிருந்து விடும் மூச்சுக் காற்றினால்தான், கர்ப்பகிரகத்தில் உள்ள மூலவருக்கு உயர்நிலை கிடைக்கும் என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை. மூலவரின் வயிற்றுப்பகுதியில் உள்ள தொப்புள் பாகத்தை உயர்நிலையாகக் கொண்டு, அந்த இட மட்டத்தின் நேராக நந்தியின் மூக்கு அமையுமாறு கோயில்களில் நந்தி அமைக்கப்படுகிறது. இம்மூச்சுக்காற்று தடைபடாமல் செல்வதற்காகவே குறுக்கே போவது கூடாது என்கின்றனர். சன்னதியைவிட்டு அகன்று நின்று வழிபட வேண்டும் என்று சொல்வதும் இதன் விளைவாக வந்ததாகும்.

**மாவிலைத் தோரணம் கட்டுவதன் தத்துவம் என்ன?**

மாவிலை ஒரு கிருமிநாசினி இதற்கு துர் தேவதைகளை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுக்கும் சக்தியும் உண்டு. மேலும் மாவிலை அழுகுவது கிடையாது முறையாக காய்ந்து உலரும் இதுபோல், வாழ்க்கையும் கெட்டுப் போகாமல் நீண்டகாலம் நடைபெற்று முற்றுபெற வேண்டும் என்ற நம்பிக்கையுடன் மங்கலம் பெருக மாவிலைத் தோரணம் கட்டுகிறோம்.

**மாலையில் விளக்கேற்றிய பிறகு தண்ணீர், உப்பு பிறருக்கு தரலாமா?**

விளக்கேற்றிய பிறகு, நம் வீட்டு வாசலில் ஒருவர் மயங்கிக்கிடக்கிறார் என்றால் தண்ணீர் கொடுக்க வேண்டும். உப்பெல்லாம் இப்போது யார் கேட்டு வருகிறார்கள்! உப்பு லட்சுமியின் அம்சம் என்பதால் இப்படி சொல்வதுண்டு. பகலிலேயே யாரும் கேட்டு வந்தாலும் கூட, கடையில் போய் வாங்கிக் கொள்ளுங்கள் என சொல்லி விடுங்கள். உதவுவது என்பது வேறு, கடன் கொடுப்பது என்பது வேறு.

## சூரசம்ஹாரத்தின் தத்துவம்

ஆணவ மலம் நிறைந்த உயிரே சூரன். ஆணவம் முதிர்ந்த போது உயிர் இறைவனை ஒரு போதும் காணாது. ஆணவத்தை ஒழித்தால் தான் அது இறைவனோடு சேரமுடியும். ஆணவத்தைப் போக்க வல்லவரான இறைவன் உயிர்களின் மீது கொண்ட கருணையால் உயிர்களின் ஆணவமாகிய சூரனின் ஸ்தூல உடம்பைப் போக்கி (ஆணவமலம் நீங்கிய அச்சூரனின்) ஆத்மாவைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறார் என்பதே சூரசம்ஹார தத்துவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சனைக்குரிய மந்திரங்கள்

துர்க்கை : ஓம் ஐம் கிரீம் துர்க்காய நமக!

இலக்குமி : ஓம் ஐம் கிரீம் கமலோ, கமலாலமே
ப்ரசீத ப்ரசீத ஐம் கிரீம்
மஹாலக்சுமி நமக.

சரஸ்வதி : ஓம் ஐம் கிரீம் வத வத
வாக்கு வாதனியை சரஸ்வதியே
நமக.

## அர்ச்சனைக்குரிய தமிழ் பாமாலைகள்

துர்க்கை : ஓம் வீரத்தின் திரிபுரியே,
வினையகற்றும் தயாபரியே,
வெல்க நீ வெற்றித் தாயே!

இலக்குமி : ஓம் செல்வத்தின் தேவியே,
திருநிறைவினிற் திருமகளே,
செழிக்க நீ செல்வத் தாயே!

சரஸ்வதி : ஓம் கல்விக்கு அரசியே,
நிறை வாக்கிற்கு உரியவளே,
வாழ்க நீ கல்வித் தாயே!

### சண்டேசுவரர் வழிபாடு

சிவதரிசனப் பலன் சண்டேஸ்வரரைத் தரிசித்தால் தான் பூர்த்தியாகும். எப்போதும் தியானத்தில் இருக்கும் அவரை வழிபடும் போது மூன்று முறை கையால் மெதுவாகத் தட்டி வழிபடவேண்டும். சண்டேசுவரரை முழுவலமாக சுற்றக்கூடாது. மூன்று முறை கைதட்டுவது ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் எனும் முக்குற்றங்களால் வரும் தீங்கு விலகும். அதாவது தன்னால் வரும் துன்பம், சூழலால் வரும் துன்பம், இயற்கையால் வரும் துன்பம் எனும் முத்துன்பங்கள் விலகும் பொருட்டு கைதட்டப்படும். சண்டேஸ்வரர் சந்நிதியில் வேட்டி நூலையோ,சேலை நூலையோ எடுத்துப்போடக்கூடாது.



தொகுப்பு :
மாத்தளை சைவ மகா சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திப் பெருவிழா சிறப்புற வாழ்த்தும்...!



*தரமான சுவையான ஐஸ்கிறீமிற்கு*

# நிரோசா ஐஸ்கிறீம்,

**இல : 25A,**

**போமலுவ வீதி, மாத்தளை.**

**தொலை பேசி :**

**066-2231418**

**071-5743492**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களும் ஆலய வழிபாடும்

சைவ சமயிகளின் வாழ்க்கையில் ஆலய வழிபாடு இன்றியமையாததொன்றாகும். இந்துக்களான நாம் வழிபாட்டை ஒழுங்கான முறையில் வழிபடும் இடமே ஆலயமாகும். இத்தகைய ஆலயத்தை இரண்டாகப் பிரிக்கலாம். "ஆ" என்பது ஆன்மா. "லயம்" என்பது ஒடுக்கம் என பொருள்படும். அதாவது ஆன்மா லயப்படும் இடம் ஆலயமாகும். கோயில் என்பது இறைவன் உறையுமிடமாகும்.

இத்தகைய ஆலயங்களுக்கு தினந்தோறும் சென்று வழிபட வேண்டும். தினந்தோறும் செல்ல முடியாதவர்கள் செவ்வாய், வெள்ளி, மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி போன்ற விசேட விரத நாட்களில் சென்று வழிபடுதல் வேண்டும்.

பசுவின் மடியில் பரந்திருக்கும் பால் போல இறைவன் எங்கும் இருக்கிறான் என்பதால் நாம் தூணையோ, கதவையோ நாம் வழிபட முடியும். ஆனாலும் நம் மூத்தோரிகளின் சொல்லிற்கிணங்க "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனும் பழமொழிக்கிணங்க இறைவனை வழிபட உகந்த இடம் ஆலயமே ஆகும்.

ஆலயத்திற்கு செல்லும் போது தோய்த்துலர்ந்த ஆடையணிந்து, நீராடி, சிவசின்னங்களை அணிந்து செல்லல் வேண்டும். ஆலயத்திற்கு செல்லும் போது பூ, பழம் பாக்கு, வெற்றிலை, தயிர், பத்தி, சூடம் ஆகிய பூசைப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

நாம் ஆலயத்திற்கு சென்றவுடன் கை, கால், முகம் என்பவற்றை கழுவி விட்டு உள்ளே சென்றவுடன் கோபுரதரிசனத்தை அடுத்து மூலமூர்த்தியான விநாயகரை வணங்கி மற்றைய தெய்வங்களை வணங்க வேண்டும் என்பது இந்துக்களின் ஐதீகமாகும்.

இவ்வாறு புனிதமான ஆலயத்தில் செய்யகூடிய விடயங்கள் பல உண்டு. அவற்றுள் சில ஆலயத்தை கூட்டுதல், கோலம் போடுதல், தோரணம் கட்டுதல், பூமாலை கட்டுதல் என்பனவாகும். எச்சில் துப்புதல், தலைமுடி கோதுதல், காலை நீட்டி அமர்தல் என்பன நாம் செய்யக் கூடாத விடயங்களாகும்.

நாம் ஏன்? தேர்த்திருவிழா கொண்டாடுகிறோம் என்று நமக்கே தெரியாது. சிலர் கோயிலுக்கு பெருநாள் போன்ற விசேட தினங்களில் சிலர் செல்வர். ஆனால் திருவிழா என்றால் அனைவரும் அங்குதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பர். ஏனென்றால் அன்னதானம் வழங்கி வெகுவிமரிசையாக கொண்டாடலாம் என்றுதான் செல்வர். நாம் எப்பொழுது சென்றாலும் இறைவனின் தரிசனமே அன்னதானம் உண்டது போல இருக்கும் என்று கூறினால் மிகையாகாது.

சில காவல் தெய்வங்களும் உண்டு. காளி, முனி, கருப்புசாமி என்பவையாகும். அவற்றை நாம் ஏன் ஆலயத்தில் பார்க்க வைப்பதில்லை? அவர்கள் ஊருக்கும், நமக்கும் காவலாக இருப்பர். ஆலயத்திற்கு செல்வோர் பூசைப் பொருட்களை என்னால் வாங்க இயலாது என்பது தான், அப்படி அல்ல ஒரு கூடையில் புஷ்பங்கள் மட்டும் கொண்டு சென்று பூசை செய்தாலும் இறைவன் ஏற்றுக் கொள்வார்.

நாம் மனம், வாக்கு, காயம் எனும் திரிகரணங்களால் சூழபட்டுள்ளோம் என்பது நமக்கே தெரியும். மனம் இறைவனை நினைக்கவும், வாக்கு இறைவனை துதிப்பாடவும், காயம் இறைவனை வணங்கவும் ஆகும்.

எந்தவொரு ஆலயமானாலும் சரி அதில் பலிபீடம் ஒன்று இருக்கும். அதில் நாம் நமது தீயகுணங்களை பலிபீடத்தில் பலியிடுகின்றோம். நாம் ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு வகையான பூசைகள் நடக்கும். அதில் அம்மனுக்கு தேசிக்காய் மாலையும், பூசைப்பொருட்களும், அனுமனுக்கு வெற்றிலை மாலையும் பூசைப்பொருட்களும் வைத்து பூசை செய்வர்.

தெய்வங்களுக்கு வாகனம் உண்டு. அம்மனுக்கு சிங்கம், விநாயகருக்கு எலி, முருகனுக்கு மயில் என்பனவாகும். நாம் இறைவனுக்கு எதிராக செய்யும் காரியங்கள் அனைத்தும் நமக்கே தீங்கு விளைவிக்கும் என்பது உண்மையாகும்.

இத்தகைய ஆலயத்திற்கு சென்று இறையருள் பெற்று சந்தோஷமாய் வாழ்வோம் என்று கூறி ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்து வழிபட வேண்டும்.

ஆக்கம் : மத்திய பிரிவு - I
**செல்வி. S.காந்தரூபி**
மா/கலைமகள் த.ம.வி,
கவுடுபெலல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ நாராயண வாஸ்து ஜோதிட பீடம்

- வாஸ்து
- ஜோதிடம்
- எண்கணிதம்
- வீட்டு வரைபடம்

ஜோதிஸ் ஸ்ரீ லெ.கவியரசன்

No : 71/1A, 3rd Lane
Suduganga Watta,
Kaludawela.
Matale.
Tel : 0777-377653




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திப் பெருவிழா சிறப்புற வாழ்த்தும்...!

" Sarath "
Kottuwa Kadaya
Dealers in all Kind of Materials



- SAREES
- P.T. & COTTON
- LACE
- PLANE VISCOS
- P.T.D. VISLOS
- MASLIN
- LAMASAREE
- POPLIN
- INTER COOLAR
- CHEETHA MATERIAL

No : 91/4/10,
2nd Cross Street,
Colombo - 11
Tel : 0777-378148

No : 3/1A,
King Street,
Matale.
Tel : 066-4545143


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DDR PHARMACY & DDR Distributors

Dealer for, Medicine
SMA Milk Powder, Edna Choklets

Tel :
081-2232324
081-4503041
Mob : 075-5326992

No : 38, Central Market
Kandy.

E - Mail : ddr_pharmacy@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திப் பெருவிழா சிறப்புற வாழ்த்தும்...!

# KRISHNA TEX
# &
# SHOE PALACE

**Dealers in Ladies, Gents, Child Textiles & Shoe Slippers**

**Tel : 077-9772624**
**075-5325931**

**No : 515, Main Street,**
**Matale.**

பக்திப் பெருவிழா சிறப்புற வாழ்த்தும்...!

# BOMBAY STORES

***Dealers in Textiles, Fancy Goods and Stationery***

***No : 155/A, Gongawela Road,***
***Matale.***

Tel : 066-2222073



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்தளைசைவமகா சபை பக்திப் பெரு விழா-2 2016,
## சமயத் திறன் போட்டி முடிவுகள்
### பேச்சுப் போட்டி

| இல. | பிரிவு | பாடசாலை | பெயர் | போ.இ. | வகுப்பு | நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | இந்துதே.கல்லூரி | முத்துக்குமார் லோஷினி | 32 5A | 5 | 1 |
| 2. | I | பாக்கியம் தே.கல்லூரி | விஜயநாதன் லிசானி | 16 5A | 5-3 | 2 |
| 3. | I | ஸ்ரீ குமரன் ஆ.பா. | R. பவித்ரா | 11 5B | 5 | 3 |
| 4. | II-I | சூரிவெல ஹமீடியா க. | S.தருசிகா | 34 6A | 7 | 1 |
| 5. | II-I | மா.கணேஸ்வராவித் | P.பிரியதர்ஷாந்தினி | 9 6B | 6 | 2 |
| 6. | II-I | மா.கணேஸ்வராவித் | M.கிரகன்யா | 9 6A | 7 | 3 |
| 7. | II-I | வாரியபொலத.வித் | கிருஸ்ணன் தேனுஜா | 4 6B | 8 | 3 |
| 8. | II-II | வாரியபொலத.வித | பாலகிருஸணண். சுபாசினி | 4 7A | 10 | 1 |
| 9. | II-II | இந்துதே.கல்லூரி | சசிகுமார்சசிதரன் | 32 7A | 10 A | 2 |
| 10. | II-II | மா.கந்தேநுவர த.ம.வி. | V.தினகேஸ்வரி | 28 7A | 10 | 3 |
| 11. | III | ஆமினாதே.கல்லூரி | பன்னீர்செல்வன் சுவர்ணலதா | 41 6A | - | 1 |
| 12. | III | மா.கந்தேநுவரதமிழ்ம.வி. | R. தர்ஷினி | 28 8A | 11 | 2 |
| 13. | III | இரத். இந்துமகாவி. | J.அஜீவனா | 13 8A | 11 | 3 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியப் போட்டி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | I | இந்துதேசியகல்லூரி | இரவீந்திரன் ரஸ்மிகா | 32 1A | 05 | 1 |
| 2 | | ஸ்ரீ குமரன் ஆரம்பபாடசாலை | சி.போசிதா | 11 1A | 04 | 2 |
| 3 | | கலைமகள் தமிழ் வித்தி. | D.தஸ்மிதா | 29 1A | 05 | 3 |
| 4 | II-I | இந்துதேசியகல்லூரி | அருணாசலம் ரதுஷன் | 32 2B | 08 | 1 |
| 5 | | இந்துதேசியகல்லூரி | இராமநாதன் ஆகாஷ் | 32 2A | 06-D | 2 |
| 6 | | ஆஜ்மிர்தேசியபாடசாலை | சத்தியமூர்த்தி ஹினுஷ்கர் | 42 2B | 07 | 3 |
| 7 | II-II | இரத்தோட்டை இந்து ம.வி. | S.ரூபினா | 13 3B | 10 | 1 |
| 8 | | குரிவெலஹமீடியாவித்தி. | M. கோகுலன் | 34 3B | 09 | 2 |
| 9 | | கலைமகள் ம. வித்தி. | Sபிரசாந்த் | 29 3A | - | 3 |
| 10 | III | கந்தேநுவர த.ம.வி. | P.திருச்செல்வம் | 28 4A | 12 | 1 |
| 11 | | எல்கடுவதமிழ் ம.வி. | S. லேனுகா | 37 4B | 12 | 2 |
| 12 | | கலைமகள் ம. வித்தி. | C.சுகேசன் | 29 4B | 12 | 3 |

## கட்டுரைப் போட்டி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | II-I | கலைமகள் மகா வி. | S.காந்தரூபி | 29 9A | - | 1 |
| 2 | | குரீவெல ஹமிடியாகல். | Y.சுஹாசினி | 34 9A | 07 | 2 |
| 3 | | ஹபுகஸ்பிடியதமிழ் வி. | S.ஹோசானி | 33 9A | 08 | 3 |
| 4 | II-II | சாஹிராதே.கல்லூரி. | R.யதுர்சன் | 1 10B | 10 | 1 |
| 5 | | வுாரியபொலதமிழ் வி. | சத்தியசீலன் தர்சிகா | 4 10B | 10 | 2 |
| 6 | | குரீவெல ஹமீடியாகல். | P.பவித்ரா | 34 10A | 09 | 3 |
| 7 | III | இரத்தோட்டை இ.ம.வி | D.சிவசங்கரி | 13 11A | 12 | 1 |
| 8 | | கலைமகள். மகா வி. | R.டிலக்ஷனா | 29 11A | 12 | 2 |
| 9 | | மா. இந்துதே.க. | க.சச்சின்விக்னேஷ் | 32 11A | 11 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

- சைவத்தை போற்றும் 2016 பக்திப் பெருவிழா 2 எனும் நிகழ்வை 2016.07.24 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்த அருளும். துணையும் நின்ற பரம்பொருளான இறைவனுக்கு முதற்கண் நன்றிகளை நல்குவதில் மன நிறைவடைகின்றோம். மேலும்,
- பக்தி பெருவிழா சிறப்பு மலருக்காக ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய பெருந்தகைகளுக்கும்,
- பக்திப் பெருவிழா 2 நிகழ்வுக்காக பிரதம அதிதியாக வருகைத் தந்து நிகழ்வை சிறப்பித்த அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களுக்கும், கண்டி. உதவி இந்திய தூதுவர், செல்வி.ராதா வெங்கட்ராமன் அவர்களுக்கும், மற்றும் சிறப்பு அதிதிகளாக, கௌரவ அதிதிகளாக வருகைத் தந்து நிகழ்வை சிறப்பித்த நல்லுள்ளங்களுக்கும்,
- இப்பக்திப் பெருவிழாவை சிறப்பாக நடாத்த மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தை தந்துதவிய மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான தலைவர் உள்ளிட்ட நிர்வாக சபையினருக்கும்,
- பக்திப் பெருவிழாவை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட சமயத்திறன் போட்டிகளுக்கு நடுவர்களாக பணி செய்த பெருந்தகைகளுக்கும், போட்டி நிகழ்வுக்காக மாணவர்களை பங்குபெறச் செய்த பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கும், போட்டி நிகழ்வை நடாத்த இட ஒழுங்கை ஏற்பாடு செய்து தந்த மாத்தளை இந்து தேசிய கல்லூரி அதிபர் மற்றும் பாடசாலையின் இந்து மாமன்றத்தினருக்கும்,
- பக்திப் பெருவிழா 2 நிகழ்வுக்காக விளம்பர பதாகை மூலம் அன்பளிப்புகளை நல்கிய வர்த்தக ஸ்தாபனங்களை சேர்ந்த அன்பர்களுக்கும்,
- சமயத்திறன் அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் களுக்கான தங்க, வெள்ளி, வெண்கல பதக்கங்களை பெற்றுத் தந்த திரு.இரா.ஸ்ரீகுமார் அவர்களுக்கும், சான்றிதழ் அச்சிட்டு வழங்கிய திரு.சங்கர் செல்வராஜா அவர்களுக்கும்.
- பக்திப் பெருவிழா 2 நிகழ்வுக்காக அழைப்பிதழ்களை அச்சிட அனுசரனை நல்கிய திரு.M.சுப்பையா செட்டியார் & Sons. மாத்தளை நிறுவனத்தாருக்கும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பக்திப் பெருவிழா 2 சிறப்பு மலருக்காக விளம்பரங்களை தந்து பங்களிப்பு நல்கிய நல்லுள்ளங்களுக்கும்,
- பக்திப் பெருவிழா 2 சிறப்பு மலருக்கான ஆக்கங்களை வழங்கிய அன்பர்களுக்கும்,
- பக்திப் பெருவிழா 2 நிகழ்வு சம்பந்தமான ரூபவாஹினி நிகழ்ச்சியை தந்துதவிய தமிழ்ப் பிரிவு நிகழ்ச்சிப் பணிப்பாளர் திரு.M.N.ராஜா அவர்களுக்கும்,
- பக்திப் பெருவிழா 2 நிகழ்வுக்காக ஆன்மீக சொற்பொழிவுகள், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள் என நிகழ்ச்சிகளில் பங்களிப்பு செய்த உள்ளங்களுக்கும்,
- ஒளி, ஒலி வசதிகளை நல்கிய திரு.A.ராஜேந்திரா அவர்களுக்கும்,
- பக்திப் பெருவிழா சம்பந்தமான விடயங்களை பத்திரிகைகளில் பிரசுரித்த பத்திரிகையாளர் தினகுரல் உதவி பிராண்ட் முகாமையாளர். பாஸ்கரன் பிரதீபன் அவர்களுக்கும், மாத்தளை தினகுரல் நிருபர் ஆ.சுதாகரன் அவர்களுக்கும்,
- பரிசுப் பொருட்களை வழங்கிய கொழும்பு, பூபாலசிங்கம் மற்றும் விஸ்கா உரிமையாளர்களுக்கும்,
- பக்திப் பெருவிழா 2 நிகழ்வு சிறப்புற நிறைவேற பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்புக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிய எமது சபையின் கௌரவ அங்கத்தவர்களுக்கும்,பக்தி பெருவிழா -2 சிறப்பு மலரை வெளியிட ஒத்துழைப்பு நல்கிய மாத்தளை சைவ மகா சபையின் கௌரவ அங்கத்தவர்களுக்கும்,
- 2016 தம்பலகல கணேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் நடைப்பெற்ற மருத்துவ முகாம் நிகழ்விற்கு பங்களிப்பு செய்த திரு.மா.ராம்திலகர் அவர்களுக்கும்,
- இப்பக்திப் பெருவிழா 2 நிகழ்வுக்காக மண்டப ஒழுங்குகளை மேற்கொண்ட உள்ளங்களுக்கும்,
- எமது சபையின் பக்திப் பெருவிழா நிகழ்வுக்காக பொருளுதவி, நிதியுதவி, சரீர உதவி என பலவகைகளில் உதவி செய்த நல்லுள்ளங்களுக்கும்,
- பக்திப் பெருவிழா சிறப்பு மலரினை வடிவமைப்பு செய்த **Sutha Printers** மாத்தளை நிறுவனத்தாருக்கும்,

மேலும் " **பக்திப் பெருவிழா - 2** " நிகழ்வு சிறப்புற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை நல்குவதில் மன நிறைவடைகின்றேன்.

**து. சந்திரசேகரம்பிள்ளை**
செயலாளர் (2015 - 2016)
சைவ மகா சபை - மாத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments form..

# Ruby International Associates

RIA

Importers of Machinery & General Hardware, Manufacturers Agents, Suppliers of Fluid Control Engineering items for any type of industry



KLINGER

Forbes Marshall

spirax sarco

REGISTERED OFFICE

No. 333 - 1/3, OLD MOOR STREET, COLOMBO 12
Tel : 011 2439693 (Direct), 011 2337259, 2440952
Fax : 011 2446506 E-mail : rubyia@dialognet.lk

SHOWROOM

No. 346, OLD MOOR STREET, COLOMBO 12
Tel : 011 [illegible] Fax : 011 [illegible]
E-mail : rubyia@sltnet.lk Web : www.rubyia.lk

With Best Compliments form..

DTC

# DILAN TRADING CO.

Distributors for Herbal Oils, Bee Honey, Cowghee,
Rose Water, Glycerine, Udayam Sambrani Etc.....
Lim Mix Oma Water Pooja Products.

*Since 1986*

No : 91/14A, I.D.H.Road, Matale.
Tel : 066-2231468, 066-3925231, 071-9062852, 071-5940904
Fax : 066-2232820



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Life is so much easier now!

**Now for the first time in Sri Lanka, Full Option offers a breakthrough ATM payment option.**

**How to collect your claim:**

1. Opt for collecting your claim from ATM when your claim is approved.
2. You receive an SMS with the approved amount and the PIN.
3. Go to your nearest Sampath Bank ATM and select Mobile Cash Option.
4. Enter your NIC number, approved claim amount and the PIN.

ATM claim withdrawals upto Rs. 40,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Call 2303 300 and make your vehicle Full Option today!**

JANASHAKTHI FULL OPTION

JANASHAKTHI INSURANCE